மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 3 / மார்ச்சு 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## அரசியல் போர்





## "நாகசாமியை நீக்க வேண்டும்"

**மு.க.ஸ்டாலின்**

## புதைக்கப்படும் தமிழர் தொன்மை

## கீழடி

உங்கள் உடல் நலனில் அக்கறையுடன்

24 தமிழ்

ஒவ்வொரு வாரமும்...
புதுப் புது வீடியோக்கள்...

இன்றே YouTube ல் எங்களுடன்
இணைந்திடுங்கள்

24tamil.com



மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly March 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

அரசியல் போர் (தலையங்கம்)........ 4

நீதிக்கட்சியின் முன்னோடி சர்.ஏ.டி. பன்னீர்செல்வம்........ 5

ஆதரவு பெற்றோர் இல்லம் (சிறுகதை)
-இருங்கோவேள்........ 7

விபத்தில் சிக்கியவர்களை காப்பாற்றுபவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு
– சைதை மணிமாறன்........9

இந்திரன் பற்றியதோர் கண்ணோட்டம்
-ம.சோ.விக்டர்........ 11

சாதிப்போம் (கவிதை) ........13

பறவைகள் எப்படிப் பறக்கின்றன ஓர் ஆய்வு
-பீமபெருமாள்........ 14

நாகசாமியை நீக்க வேண்டும்
– மு.க.ஸ்டாலின்........ 16

உச்ச நீதிமன்றத்தின் குறிப்பிடத்தக்க தீர்ப்பு........ 17

மகிழ்ச்சி
– எஸ்தார் ரோஸ்லின் ........18

யார் இந்துக்களுக்கு எதிரி........ 19

இந்து மதத்தை மட்டும் எதிர்த்தாரா பெரியார் ........22

மருத்துவம்........ 25

புதைக்கப்படும் தமிழர் தொன்மை : கீழடி
– முத்தமிழ்வேந்தன்........ 28

அரசியல் அதிகாரங்களிலிருக்கும் அரசியல் வாதிகளுக்கு ஓய்வுதியம் தேவையா? 32

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
*– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை அனுப்புவோர் “mutram" என்ற பெயருக்கு எடுத்தனுப்பலாம்.



# அரசியல் போர்

பா துகாப்புமிக்க இந்திய இராணுவத்திற்குள் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி இராணுவ வீரர்கள் பலரை வெடிக்கச் செய்திருப்பது என்பது, நாட்டில் நல்லாட்சி நடக்கிறது என்பதை பறை சாற்றுவதைப் போல் பேசுகின்றனர் ஆளும் கட்சி யினர்.

பல இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்று CRPF செய்தித் தொடர்பாளர் கூறியும் உரிய நடவடிக்கைகள் எடுக் காமல் இருந்தது ஏன் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. போக்குவரத்து தடை செய்யப்பட்டு தீவிர சோதனைகள் ஒரு வாரமாக நடைபெற்றது என்று கூறப்படுகிறது. அதையும் தாண்டி எப்படி 350 கிலோ வெடிபொருள் உயர் பாதுகாப்பு தேசிய நெடுஞ்சாலைக்கு வந்ததோ தெரியவில்லை. அந்த வெடிபொருட்கள் இராணுவத்தினர் மட்டுமே பயன்படுத்தக்கூடியது என்றும் செய்திகள் வரு கின்றன. இந்த பகுதிக்குள் வெடிகுண்டுகள் நிரம்பிய SCORPIO வாகனத்தை எல்லா ராணுவ CHECKPOST களையும் தாண்டி ஒருவர் உள்ளே கொண்டு வந்து மோதுகிறார் என்றால் இந்திய இராணுவம் அவ்வளவு பலவீனமுள்ளதா? அல்லது அரசு இராணுவத்தை பலவீனமாக்கியுள்ளதா? சிந்திக்க வேண்டும் நாம்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் பிரித்து அனுப்பப்பட வேண்டிய படைவீரர்களை ஒட்டு மொத்தமாக ஒரே நேரத்தில், அதிகாலையில் நகர்த்த உத்தரவிட்டது யார்? ஏன் அப்படிச் செய்தார்கள்? நகர்வுகளுக்கு குண்டு துளைக்காத வண்டிகள் ஏன் வழங்கப்படவில்லை? இந்த மோசமான நிகழ்வு நடந்தபின் எந்தப் புலனாய்வுகளும் நடத்தாமல் ஆறு மணி நேரத்துக்குள் வீடியோ வெளியிடப்பட்டு லக்சர் இ மொகம்மத் அமைப்பு தான் செய்தது என்று தீவிரவாதியின் பெயரோடு தொலைக் காட்சி களுக்கு செய்தி எப்படிக் கிடைத்தது.

இவை எல்லாவற்றையும் விட தேர்தல் நேரத்தில் மட்டும் தீவிரவாதிகள் தீவிரமாக இந்தியப் படைகளுக்குள் புகுந்து உயிர்கொலை புரிவது ஏன்? ஒவ்வொரு தேர்தலிலும் மோடி வெற்றி பெற்று இந்திய நாட்டின் தலைமை அமைச்சாராக நற்பணி புரிய வேண்டும் என்று தீவிரவாதிகள் நினைத்து தான் இச்செயலைச் செய்கிறார்களோ! கடைசி இரண்டு மூன்று மாங்களில் மட்டும், நம்மில் ஓரிரு வரை இழந்தால், நமக்கு ஒன்றும் பெரிய இழப்பாக இருக்கப் போவதில்லை.

நாலே முக்கால் ஆண்டுகள் மோடி நம்மை கண்டு கொள்ள மாட்டார். என்று தீவிரவாதிகள் நினைப்பதால் தான் இப்படி நடக் கிறதோ என்னவோ தெரியவில்லை.



# நீதிக்கட்சியின் முன்னோடி சர்.ஏ.டி.பன்னீர்செல்வம்

நீதிக்கட்சியின் முன்னோடி சர். ஏ. டி. பன்னீர் செல்வம் திருவாரூர் மாவட்டம், செல்வபுரத்தில் 1/6/ 1888 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் தாமரைச்செல்வம். திருச்சியில் கல்வி பயின்ற ஏ. டி. பன்னீர்செல்வம் லண்டன் சென்று பார்அட்லா படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றார். தாயகம் திரும்பிய ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் நீதிக்கட்சியில் இணைந்தார். 1918ஆம் ஆண்டு முதல் 1920ஆம் ஆண்டு வரை தஞ்சையில் நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அக்காலத்தில் தஞ்சையில் ஏற்பட்ட குடிநிர் பஞ்சத்தை தீர்த்து வைத்தார். தஞ்சை மாவட்ட உயர்கல்வி குழுத்தலைவராக இருந்து தஞ்சை மாவட்டத்தின் கல்வி நிலை உயரப் பாடுபட்டார் ஏ. டி. பன்னீர்செல்வம். தஞ்சை மாவட்டக்கழகத் தலைவராகப் பொறுப் பேற்று 6 ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்போது வழிப்போக்கர் சத்திரங்களில் சாதி பேதங்கள் மலிந்திருந்ததை அகற்றப் பாடுபட்டார்.



ஆதிதிராவிட மாணவர்களுக்கான விடுதி ஒன்றைத் தஞ்சையில் ஏற்படுத்தி, ஆதிதிராவிட மாணவர்களின் கல்விக்குத் துணை புரிந்தார். திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரிக்கு அரசர் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்தார். அங்கே சமஸ்கிருதம் மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்த நிலையினை மாற்றி தமிழ்க்கல்வியைத் தொடங்கச் செய்தார் ஏ. டி. பன்னீர் செல்வம். தமிழ் கற்போர், புலவர் பட்டம் பெறும் வகையில் அங்கே தமிழ்க் கல்வி தழைக்கத் தொண்டு புரிந்தார். 1930ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற முதல் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டார். 1931ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிலும் காந்தியடிகளுடன் கலந்து கொண்ட பெருமை ஏ. டி. பன்னீர்செல்வத்திற்கு உண்டு.

1937ஆம் ஆண்டு தஞ்சாவூர் சட்ட மன்ற உறுப்பினர் ஆகி சென்னை மாகாண பொப்பிலி ராஜா தலைமையிலான அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக திறம்பட பணியாற்றினார். 1937 1940 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு இவர் தலைமை தாங்கினார். இங்கிலாந்தில் போர்க்கால அமைச்சரவை அமைந்த போது, இந்தியாவுக்கான அமைச் சருக்கு ஆலோசனை கூறும் குழு உறுப்பினர் பதவி பெற்றார். 1929ஆம் ஆண்டு ராவ்

பகதூர் பட்டமும், 1938ஆம் ஆண்டு சர் பட்டமும் இவரைத் தேடி வந்தன. நீதிக்கட்சி ஆட்சியில் இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது மேட்டூர் அணைத் திட்டத்தால் பயன் அடையும், தஞ்சை மாவட்ட விவசாயிகள் மாவட்ட நில உரிமை யாளர்கள், ஏக்கருக்கு ரூ. 15 கூடுதல் தண்ணீர் வரி செலுத்த வேண்டும் என்ற கருத்து முன்மொழியப் பட்ட போது, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தும் பன்னீர்செல்வம் அதை கடுமையாக எதிர்த்தார். தமிழகத்திற்கு உணவு அளித்துவரும் தஞ்சை மாவட்டத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைத் தான் மேட்டூர் அணை கட்டியதன் மூலம் அரசு செய்து இருக்கிறது. கடமையைச் செய்வதற்கு கட்டணம் வசூலிப்பது நியாயம் இல்லை என்று, தனது மனதில் பட்டதை யாருக்கும் அஞ்சாமல் கூறியவர் பன்னீர்செல்வம். இரண்டாம் உலகப் போரின் போது, ஆங்கில அரசின் போர்க்கால அமைச்சரைவக்கு ஆலோசகராக பன்னீர்செல்வம் நியமிக்கப்பட்டார்.

பதவி ஏற்பதற்காக இங்கிலாந்திற்கு விமானத்தில் பயணம் செய்தபோது 1/3/1940 அன்று ஏற்பட்ட விபத்தில் அகால மரணமடைந்தார்.

1919ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டு வரை மகாத்மா காந்தி தலைமையில்ட இந்தியா முழுவதும் காங்கிரஸ் இயக்கம் ஆங்கிலேயர்களை எதிர்த்து, இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய சமயத்தில் தமிழகத்தில் காங்கிரசுக்கு மாற்றாக நீதிக்கட்சி மட்டுமே இருந்தது. அப்போது நீதிக்கட்சி ஆங்கிலே யர்களுக்கு ஆதரவாக இருந்த காலத்தில் ராவ் பகதூர், சர் போன்ற பல்வேறு பட்டங்களைப் பெற்று, பல்வேறு பதவிகளில் பொறுப்புகளை வகித்தனர் என்று ஒரு குற்றச் சாட்டு நீதிக்கட்சியைப் பற்றி இருந்தபோதிலும், நீதிக்கட்சியினர் சீர்திருத்தங் களைச் செய்தனர். பிறபடுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களைக் கொண்டு வந்தனர்.

அதில் தமிழகத்தைப் பொறுத்தவரை, முக்கியப் பங்கு வகித்தவர் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் ஆவார். இவர், ஆங்கிலேயர் ஆட்சியில் பல்வேறு பொறுப்பு களை வகித்து, பொதுமக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களைக் கொண்டு வந்து, பொது மக்களுக்கு உறுதுணையாக இருந்தார். 1997ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டம், புதிதாகத் தொடங் கிய போது, தமிழக அரசு திருவாரூர் மாவட்டத் திற்கு இவரது பெயரை வைத்து கவுரவித்தது. 31.12.2008 அன்று நடுவண் அரசு இவருக்கு தபால் தலை வெளியிட்டு கவுரவித்தது.

**நன்றி : தினத்தந்தி.**

## ஒரு நாளில் 70 வாகனங்கள் ஏன்? இராணுவவீரரின் மனைவி துயர கேள்வி!



**தி**ருமணத்துக்கு பின்னர் 6 முறை மட்டுமே விடுமுறையில் வந்துள்ளார். அவர் தனது வேலை குறித்து என்னிடம் கூறியுள்ளார். அதில் கான்வாய் வாகனங்கள் 2 அல்லது 3 மட்டும்தான் செல்லும். அதுவும் காலையில் 3 வாகனங்கள் புறப்பட்டு சென்றால், அடுத்த வாகனங்கள் மதியமோ அல்லது இரவோதான் புறப்படும் என்று கூறியுள் ளார்.

ஆனால், இப்போது நடந்துள்ள சம்பவத்தில் 2 ஆயிரத்து 500 வீரர்கள், 70 வாகனங்களில் சென்றுள்ளனர். இதில் சதி நடந்துள்ளது. இதற்கு சரியான பதில் வேண்டும். இந்த தாக்குதலில் என் கணவர் இறந்துள்ளார். என்னைப்போல் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதற்காக கேட்கிறேன். பல பேர் உடல் ஊனமுற்றுள்ளனர்.

ஜம்மு கேம்ப்பில் 20 நாட்கள் வைத்திருந்து, மொத்தமாக ஸ்ரீநகருக்கு அனுப்பி உள்ளனர். இதில் சதி நடந்துள்ளது. இதற்கு அரசுதான் பதில் அளிக்க வேண்டும். இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடக்க கூடாது. என்னைப் போன்று யாரும் பாதிக்கப்படக்கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

தீவிரவாதிகள் தாக்குதலில் உயிர்ப்பலியான சுப்பிரம ணியன் மனைவி கிருஷ்ணவேணி மேலும் கூறும்போது "எங்களுக்கு திருமணமான புதிதில், "நாட்டுக்காக நான் உயிர் தியாகம் செய்வது எனக்கு மகிழ்ச்சிதான்" என்று அவர் கூறியுள்ளார். அவர் அன்று கூறியது போலவே இன்று நடந்து விட்டது. இது எங்களுக்கு பெருமைதான், என்றாலும் மிகப்பெரிய இழப்பு. இனி என் வாழ்க்கை அவர் நினைவு களுடன்தான்" என்றார்.

பிறந்து மூன்று ஆண்டுகள் நிறைவு பெறாத நிலையிலேயே தன் மகள் செம்பருத்தி அலை பேசியை கையாளும் விதம் குமரனுக்கு பெரும் வியப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ஒரு அலுவலகத்தில் எழுத்தர் பணியில் அமர்ந்து பின்னாட்களில் கணினியை கையாளும் நிலைக்கு வந்த ஒருவர். கணினியில் கைதேர்ந்தவர் என்று சொல்ல முடியாது. தமது பணிதொடர்பாக தேவைப்படும் கணினி செயல்பாடுகளை மட்டுமே செய்கின்றவர். ஆனால், தனது மகளின் கணினி அறிவு தம்மைவிட பல மடங்கு அதிகமாய் இருப்பதை நினைத்து ஒரு பக்கத்தில் மகிழ்ந்தாலும் மறுபக்கம் ஒருவித அச்சமாகவே இருந்தது.

தமது தந்தையாரின் காலத்தில் ஊர்கள் எவ்வாறிருந்தன என்று, தந்தை சொல்லக் கேட்டு வியப்புற்றிருக்கிறார் குமரன். அவரது இளைமைக் காலம் அதைவிட மாறிப்போய்தான் இருந்தது. அவரது வளர்ச்சியை விட அறிவியலின் வளர்ச்சி பன்மடங்கு வேகமானதாக இருந்தது. மகள் பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு, பட்டப்படிப்பை கனடா நாட்டில் படிக்க வேண்டும் என்று பள்ளி இறுதி வகுப்பிலேயே முடிவு செய்திருந்தாள். அதை பலமுறை பெற்றோரிடமும் கூறி வந்தாள். குமரன் அரைகுறை மனதோடு, “நல்ல மதிப்பெண் எடும்மா அப்புறம் பார்ப்போம்“ என்றார். செம்பருத்தியோ “என்னப்பா நான் நல்ல மதிப்பெண் எடுக்க மாட்டேனா“ என்று எதிர் கேள்வி கேட்பாள். குமரன் தான் ஒவ்வொருமுறையும் சரி, சரி தப்பும்மா என்று கீழிறங்கிச் செல்வார். இவர்கள் இருவரும் பேசிக் கொள்ளும்போது, குமரனின் மனைவி அருகிலே இருப்பதில்லை. அப்படி இருந்தாலும் வேலை செய்வது போல் நகர்ந்து விடுவார். அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது.

செம்பருத்திக்கு விபரம் தெரியத் தொடங்கிய காலத்திலிருந்து, வெளிநாட்டில் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஊட்டி வளர்த்தவர் அவளது தாய்தான். முதலிலேயே தனக்கு ஒரு குழந்தை போதும் என்று முடிவு செய்திருந்த செம்பருத்தியின் அம்மா, அந்தக் குழந்தையை துணிச்சல் மிக்க பிள்ளையாக வளர்க்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தார். ஆகவே, மகளின் தேவைகளை எல்லாம் சரியாக நிறைவேற்றி வந்தார். எல்லா

சிறுகதை

# ஆதரவு பெற்றோர் இல்லம்



இருங்கோவேள்

வீட்டிலும் மகளுக்கு அப்பாதான் ஆதரவாக, அன்பாக இருப்பார்கள். இங்கே அம்மா, அப்பாவை விட அதிகமான அளவில், மகளின் ஆசைகளை நிறைவேற்றி வந்தார்.

பள்ளிப்படிப்பும் நிறைவு பெற்றது. மகளின் விருப்பத்தை அரைகுறை மனதோடு நிறைவேற்றி வைத்தார் குமரன். செம்பருத்தி நாள்தோறும் தந்தை தாயிடம் அலைபேசியில் பேசிவிடுவாள். படித்துக் கொண்டிருக்கும்போதே அம்மா நிறைமதியின் விருப்பப்படி, நாசாவின் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டாள் செம்பருத்தி. ஆண்டின் பன்னிரெண்டு திங்கள்களில் மூன்று திங்கள் நாசாவில் இருந்தாள். படிப்புக்காக கனடா சென்ற செம்பருத்தி நான்காண்டுகளில் நாசாவின் தொடர்பால், அமெரிக்க நாட்டின் குடியுரிமை பெறும் அளவிற்கு உயர்ந்தாள். நாசாவிலேயே பணி செய்யத் தொடங்கி விட்டாள். ஐந்தாம் ஆண்டு தாயகம் வந்தாள். தந்தை குமரன் திருமணம் செய்துகொள், பிறகு வேண்டுமானால் அமெரிக்கா செல்லலாம் என்றார். செம்பருத்தி செவிசாய்க்கவில்லை.

திருமணமா? அது தேவையா? என்றாள். மகள் நமது பண்பாட்டில் இருந்து விலகிச் செல்கிறாளோ என்ற ஐயம் தந்தைக்கு ஏற்பட்டது. இந்த பேச்சில் மட்டும் தாய் நிறைமதி கணவன் பக்கம் நின்றார். மகளிடம் திருமணம் பற்றி எடுத்துக்கூறினார். அவர் கேட்கவில்லை. தாயகம் வந்து பதினைந்து நாட்கள் இருந்தவள், அமெரிக்கா புறப்பட்டாள். வாரத்திற்கு ஒருமுறை பெற்றோரிடம் பேசினார். உறவினர்களின் தொடர்பே இல்லாது இருந்தாள். இரண்டாண்டுகள் ஓடின. “அம்மா நான் செவ்வாய் கோளுக்குச் செல்ல நாசாவால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறேன். என்றாள். அடுத்தநாள் தமிழகத் தில் வந்த எல்லா செய்தித்தாள்களும் செம்பருத்தி யின் பெயரைத் தான் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. பெற்றோருக்கு மகிழ்ச்சிதான் என்றாலும் உள்ளுக் குள்ளே மகளை இழந்து விடு வோமோ என்ற அச்சம் உருவாகத் தொடங்கி விட்டது.

செவ்வாய்க் கோளுக்குச் செல்வதற்கு முதல் நாள் பெற்றோரிடம் பேசினாள். குமரனும் நிறைமதியும் கண்ணீருடன் விடைகொடுத்தனர். அதன்பிறகு மகளின் குரலை எப்போது கேட்போம் என்ற ஏக்கம் அந்தப் பெற்றோர் மனதில் நிலைக்கத் தொடங்கிவிட்டது. ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின், உலகின் பெரும் பணக்காரர்கள் இருபத்தியொரு பேர் செவ்வாய்க் கோளுக்குச் செல்ல இருப்பதாகவும் அவர்களில் பலர் அங்கேயே தங்கப் போவதாகவும், அவர்களை அங்கே தங்க வைப்பதற்கான எல்லா வசதிகளையும் செவ்வாய்க்கோளில் இருக்கிற, செம்பருத்தி தலைமையிலான குழு செய்கிறது என்ற செய்தி வந்தது. மகள் நலமாக இருக்கிறாள் என்ற செய்தி அதில் இருப்பதாகவே குமரனும் நிறைமதியும் நம்பிக்கை கொண்டனர். ஆனால், மகளை எப்போது பார்ப்போம் என்ற ஏக்கம் குமரனின் உடல்நிலையைப் பாதிக்க வைத்தது.

உலகமெல்லாம் போற்றுகிறது தங்களது மகளை என்று நினைக்கும்போது மகிழ்ச்சி உள்ளத்திலிருந்து எழுந்தாலும், அவள் நம்மோடில்லையே என்ற நினைப்பு மகிழ்ச்சியை துயரமாக்கிக் கொண்டே இருந்தது. அவளிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை. நாசாவைத் தொடர்பு கொண்டால் நம்பிக்கையான வார்த்தைகள் சொல்லுவார்கள் அவ்வளவுதான். மகள்மேல் கொண்ட பேரன்பு தந்தை குமரனை பெரும் துயருக்குள் தள்ளியது. நிறைமதி, தனது கணவரின் நிலைகண்டு, ஒரு முடிவு செய்தாள்.

ஆதரவு பெற்றோர் இல்லத்திலிருந்து ஒரு செம்பருத்தியை எடுத்து வளர்ப்பது என்பதுதான் அந்த முடிவு. கணவரிடம் கூறி, ஒப்புக் கொள்ள வைத்தாள். ஒரு வயது பெண் குழந்தையைத் தத்து எடுத்தார்கள். நகரத்தில் இருந்த வீட்டை விற்றுவிட்டு, குமரன் பிறந்த ஊருக்குச் சென்று நிலங்களை வாங்கி, குமரனின் தந்தை வைத்துவிட்டுப் போன சிதிலமடைந்த வீட்டை எடுத்துக் கட்டி, வாழத் தொடங்கினார்கள் மகள் செம்பருத்தியுடன்....

●

---

## தமிழ் இனத் தலைவர்

யார்... என்ற கேள்வி இல்லை...
நிரந்தரமாய் வாழும் திராவிடமும்
மக்கள் மனதில் மறையவில்லை...
திராவிடத்தின் தலைவன் என்று
வாரிசுகள் வந்தாலும் வசைபாட மனமில்லை
தமிழ் வேறு திராவிடம் வேறு
என்று சொல்ல துணிவுமில்லை
தலைவன் யாரடா
வரலாறு கேளடா
நமக்கொரு நாடு
அது தான் ஈழத்தில்
உருவான தமிழ்நாடு
தலைவன் மட்டும் நானில்லை
சுமை தாங்கும் போராளியும் நானே
போர்க்களத்தில் நான் மட்டும் மீளவில்லை
எனை நம்பிய தோழர்களும் மீளவில்லை
அனைவரும் மாண்டாலும்
தன் குடும்பத்தையும் அர்ப்பணித்தவன்
அனைத்தையும் போர்க்களத்தில் இழந்தவன்
உண்மையை உரக்கச் சொன்னவன்
உரிமையை எடுத்துரைத்தவன்
மனுநீதிச் சோழன் வரலாறு படித்துரைத்தோம்
இனி வரும் காலங்களில் நம் தமிழ்த்தேச
நாயகன் பிரபாகரனின் வரலாற்றை வடிவமைப்போம்
வீரன் பிரபாகரன் விதைத்து விட்டான் விதைகளை
காத்திருப்போம் வளரும் வரை...

**கட்டுமாவடி வை. ப.**

விபத்துகள் ஏற்படும்போது பலர் அருகில் இருந்தாலும், விசாரணை மற்றும் வழக்குகளில் சேர்க்கப்பட்டு, பல சிரமங்களுக்கு ஆளாக நேரிடுமோ என, தவறாகக் கருதிக்கொண்டு, விபத்துகள் பற்றிய தகவலை தெரிவிக்கவும், காயம் அடைந்தவர்களுக்கு உதவி செய்யவும், பொது மக்கள் தயக்கம் காட்டுகிறார்கள். இதனால் பெரும் பாலான விபத்துகளில் உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

இதுபோன்ற தவறான கருத்துகளை களையவும், விபத்து குறித்து தகவல் தருபவர்களையும், காயம் அடைந்தவர்களுக்கு உதவி செய்பவர்களையும் எந்தவித இன்னலுக்கும் ஆளாக்காமல் சட்டப்படி பாதுகாக்கவும், சுப்ரீம்கோர்ட்டு ஆணையின்படி அரசு உரிய விதிமுறைகளை வகுத்துள்ளது. சாலை விபத்து ஏற்படும்பொழுது அருகில் இருப்பவர் அல்லது அந்த விபத்து நடந்த இடத்தை கடந்து செல்பவர்கள், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாமாக முன்வந்து உதவிசெய்யும் நபர் அல்லது நபர்கள் இதன் மூலம் பாதுகாக்கப்படுவார்கள்.



சைதை மணிமாறன்

விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவி செய்ய முன்வரும் நபர்கள் பாதிக்கப் பட்டவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்று அனுமதித்துவிட்டு சென்று விடலாம். அவர்களிடம் வேறு எந்த கேள்வியும் கேட்கப்பட மாட்டாது. விபத்தை நேரில் பார்த்தவர் முகவரியை மட்டும் தெரிவித்துவிட்டு செல்லலாம்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ மனையில் சேர்க்கும் பாதிக்கப்பட்டவரின் உறவினர் அல்லாத உதவி செய்யும் நபர்களை, சுப்ரீம் கோர்ட்டு ஆணை மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் வழிகாட்டு தலின்படி, சம்பந்தப்பட்ட தனியார் மற்றும் அரசு மருத்துவ மனை நிர்வாகம் மருத்துவ சிகிச்சைக்கு அல்லது

# விபத்தில் சிக்கியவர்களை காப்பாற்றுபவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு

## போக்குவரத்து போலீஸ் கூடுதல் கமிஷனர் அருண்



பதிவுக்கு தேவையான பணத்தைச் செலுத்த கட்டாயப்படுத்தக்கூடாது. மேலும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை வழங்க மறுத்தால், மருத்துவ அதிகாரி ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய முன்வரும் நபர்கள், பெயர் மற்றும் தனிப் பட்ட தகவல்களை மருத்துவமனைக்கு தெரிவிப் பது, சம்பந்தப்பட்ட நபரின் விருப்பத்துக்கு உட்பட்டதாகும். மேலும் உதவிசெய்யும் நபர்கள், விபத்து தொடர்பான எந்தவித சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்கு பொறுப்பாக மாட் டார்கள். சாலை விபத்துகள் குறித்த தகவல்களை காவல்துறை அல்லது காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கும் நபர்கள், தங்களது தனிப்பட்ட தகவல்களை, தெரிவிக்கத் தேவை யில்லை. தனிப்பட்ட தகவல்களை தெரிவிக்குமாறு கட்டாயப்படுத்தும் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உதவிசெய்யும் நபர்களை விபத்து வழக்கில் சாட்சியாக இருக்கும்படி கட்டாயப்படுத்தமாட்டார்கள். அது அவரின் விருப்பத்தை பொருத்தது. மேலும் அந்த நபரை தேவையில்லாமல் காவல்துறையினர் காத்திருக்கும் படியும் கட்டாயப்படுத்தமாட்டார்கள்.

விபத்து வழக்குகளில் தாமாக முன்வந்து சாட்சி யாக இருக்க சம்மதிக்கும் நபர்களை விசாரணை அதிகாரிகள் போலீஸ் நிலையத்திற்கு வரும்படி கட்டாயப்படுத்த மாட்டார்கள். மாறாக மேற்படி நபரின் இல்லம் அல்லது அவர்கள் விரும்பும் இடத்திற்கு விசாரணை அதிகாரி சாதாரண உடைகளில் சென்று மிகுந்த மரியாதையுடன் ஒருமுறை மட்டுமே விசாரணை மேற்கொள் வார்கள்.

இந்த விசாரணையானது குற்றவிசாரணை முறை சட்டம் பிரிவு 284 மற்றும் 296 ஆகிய பிரிவு களுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படும். கூடுமா னால் 'வீடியோ கான்பரன்ஸ்' முறை பயன்படுத் தப்படும். எனவே பொதுமக்கள் சாலை விபத்துகள் குறித்த தகவல்களை, காவல்துறைக்கு உடனுக் குடன் தெரிவிக்க வேண்டும் எனவும், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித தயக்கமுமின்றி உதவி செய்து விலைமதிப்பில்லாத மனித உயிர் களைக் காப்பாற்ற ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கூடுதல் கமிஷனர் அருண் தெரிவித்துள்ளார்.

●



## எந்நாளும் நன்னாளே

உன்னைநம்பி உலகமுண்டு உணர்ந்து கொள்நீ
உழைப்பை நம்பி இல்லமுண்டு புரிந்து செய்நீ
என்னை நம்பி யாருளரே? என்ற கேள்வி
எழுந்துவிட்டால் ஓடிவரும் சோம்பல் தேடி
தன்னைநம்பி இறங்கியதால் காந்தி அன்று
தலைநிமிர்ந்து வாழுகின்றோம் நாமும் இன்று
என்னையதில் இணைப்பதில் பெருமை கண்டேன்
ஏற்றுநானும் நடந்திடவே எழுச்சி கொண்டேன்

என்னாலே முடியுமென்று அறிந்து கொண்டே
எல்லாமே இயலுமென்று துணிந்து செய்தேன்
தன்னாலே வந்ததுவே வெற்றி தேடி
தன்மான உணர்வுடனே நிமிர்ந்தும் நின்றேன்
சென்றஎல்லா நாட்டினிலும் பொருள்க ளீட்டி
சிறப்புறவே திரும்பிவந்தேன் சொந்த நாடு
அன்றாடம் வாழ்கின்ற வாழ்க்கை எல்லாம்
அர்த்தமுள்ள தாக்கியதால் வெற்றி பெற்றேன்.

நல்லதையே நாடுவதாய் உறுதி பூண்டேன்
நடத்தையிலும் தவறுஇல்லா வாழ்வ மைத்தேன்
பொல்லாதார், புறங்கூறல் தவிர்த்து வந்தேன்
புரிந்துகொண்டே வாழ்க்கைதனை
அமைத்து வைத்தேன்
இல்லையொரு தொல்லையென நினைத்து வாழ்வை
எந்நாளும் நன்னாளே என்றே எண்ணி
எல்லாமே பெற்றிங்கே வாழு கின்றேன்
எழுச்சியெனும் சொத்தென்னுள் இருப்பதாலே!

**கவிஞர். இராமன்**
சென்னை 600 024.

# இந்திரன் பற்றியதோர் கண்ணோட்டம்

தமிழ்த் தெய்வமான இந்திரன் வடமொழிச் சமய இலக்கியங்களில், குறிப்பாக, இரிக்கு வேதத்தில், சிறப்பாகப் போற்றப்படுகிறான். இந்திரன் என்பான் ஆரியர்களுக்கு உதவி செய்து, அசுரர் என்ற இனத்தாரை அழிக்கக் கரணியமாய் அமைந்தவன் என்று வேதம் சொல்கிறது. அசுரர்களின் தலைவனான விருத்திரன் என்பானை விசுவகர்மா என்ற தச்சன் செய்து கொடுத்த போர்க்கருவியான இடியைக் கொண்டு தாக்கி அழித்தான் என்றும் இரிக்கு வேதம் சொல்கிறது. இந்திரனையும் அசுரன் என்றே வேதம் சொல்வதிலிருந்து விருத்திரனும் இந்திரனும் ஒரே இனத்தார் என அறிய முடிகிறது. இனத்துக்குள் பகையைத் தூண்டி, அவ்வினத்தைப் பிளவுபடுத்தி, இந்திரனைக் கருவியாகக் கொண்டு, அசுரர் இனத்தை ஆரியம் வென்றது. அசுரர் என்பார் தமிழரே என்றும், ஆரியச் சூழ்ச்சியால், தமிழர் பிளவுபட்டனர் என்றும் வேதங்களை உன்னிப் படிப்போரால் உணர முடியும். இரிக்கு வேதம் என்பது, ஆரியச் சமய நூல் என்பதைவிட, சிந்து வெளியில் வாழ்ந்த மக்களின் இலக்கியச் சான்றாகவே கொள்வது பொருத்தமானது. அசுரர், இராக்கதர் என்ற பெயர்கள் தமிழ்ப் பெயர்களே என பாவாணர் விளக்குகிறார். சுர் சுரர் அசுரர் என்ற வாறு, பாவாணரின் விளக்கம் உள்ளது. சுரம் ஒளியுடைய, சிவந்த நிறமுடையது என்றும், அசுரம் கருமை நிறம் கொண்டது என்றும் நேர்மாறான பொருளைத் தருவதாகவும், அசுரர் என்பார் தமிழரே என்றும் பாவாணர் விளக்குகிறார். இர் இரவு இரா இராக்கதர் என்ற வழியில், கருமை நிறம் கொண்டோர் என, இராக்கதர் அழைக்கப்பட்டனர்.



தமிழ்த் தெய்வமான இந்திரன், மற்ற தமிழ்த் தெய்வங்கள் ஆரியத் தெய்வங்களாக மாற்றம் பெற்றது போன்றே, இவனும் ஆரியத் தெய்வ மானான்.

ஐந்தவித்தானாற்றல் அகல் விசும்புளார் கோமான்

இந்திரனே சாலுங் கரி
திருக்குறள்

அந்தி மாலைச் சிறப்பு செய் காதையும்

இந்திர விழவூர் எடுத்த காதையும் சிலப்பதிகாரம், பதிகம்

மேலும் மணிமேகலை திருமுருகாற்றுப்படை, திணைமாலை போன்ற கடைச்சங்க இலக்கியங் களும் இந்திரனைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

இவனை இந்திரன் என்றும், வேந்தன் என்றும், மருதநிலக்கடவுள் என்றும், தொல்காப்பியம் கூறுகின்றது.

அறுவை என்னும் சித்திரை மீனின் கூட்டத் தலைவர்களாக இந்திரனையும், துவட் டனையும் (விசுவகர்மா) இரிக்கு வேதம் கூறுகிறது. சித்திரைத் திங்கள் முழு நிலவு நாளன்று. தமிழகத்தில் இந்திர விழா எடுக்கப்பட்டதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. துவட்டன் என்பான் பெருந்தச்சன் எனவும், அவனே வச்சிராயுதம் என்ற போர்க்கரு வியை இந்திரனுக்கு வடித்துக் கொடுத்தவன் என்றும் வேதம் கூறுகிறது.

வேனில் முடங்கல் காலமான ஆனி ஆடித் திங்களில் பெய்யும் தென்மேற்குப் பருவமழையும், கடுங்கோடை இடியும் மின்னலும் இந்திரனாக உருவகம் செய்யப்பட்டுள்ளன. தென் மேற்குப் பருவ மழைக்கு முற்றிலும் தொடர்பில்லாத ஆரியரது குறிப்புகள் இந்திரனாக உருவகம் செய்யப்பட் டுள்ளன. தென் மேற்குப் பருவ மழைக்கு முற்றிலும் தொடர்பில்லாத ஆரியரது குறிப்புகள் இந்திரனைத் தமிழன் என்றே சுடும். தென்கோளரையைக் குறித்து அகி என்னும் பெரும் பாம்பை இந்திரன் வீழ்த்திய கதையும் ஹைட்ரா என்னும் விண்மீன் கூட்டத்தின் உருவகமும் ஆகும். ஹைட்ரா எனும் கிரேக்கச் சொல் பாம்பு எனக் குறிக்கப்படும். இது ஆடு கூட்டல் அரா = படமெடுக்கும் பாம்பு என்ற பொருளில் ஆடரா என்று சொல்லப்பட்டு, அடரா ஹைட்ரா எனத் திரிந்தது என்க. மேலும் இந்திரனை மாதளி என்று இரிக்கு வேதம் சொல்வதும், மாதளி என்பதற்குத் தமிழில் பெருமழை என்ற பொருள் இருப்பதும் இந்திரன் தமிழனே என்று காட்டும்.

துளங்கொளியும் முடப்பனையும் நளி என்ற விண்மீன் கூட்டத்தில் அடங்கியவைகளாகும். இக் கூட்டம் தேளைப் போன்று தெரிந்ததால், இப் பெயர் ஏற்பட்டது. அதன் கொடுக்குப் பகுதியே குருகு எனப்படும் மூலம் ஆகும். இவ்விண்மீன் கூட்டமே, விருத்திரனாக உருவகம் செய்யப் பட்டுள்ளது. விருத்திரன் கொடியவன் என்றும் அவனை இந்திரன் வீழ்த்தினான் என்றும் இரிக்கு வேதம் சொல்கிறது. விரிதிறன் கொண்டவனே விருத்திரன் என வடமொழியில் அழைக்கப் பட் டான். இவனும் சிந்துவெளியில் வாழ்ந்ததோர் சிறப் பான மன்னனே எனலாம். இந்திரன் விருத்திரன் போர் என்பது இரண்டு தமிழ்க் குழுக்கள் ஒன்றை யொன்று எதிர்த்துப் போரிட்டுக் கொண்டதே யாகும்.

கி.மு.300 ஆண்டுகளில், ஆரியரின் சமயக் கொள்கை, தமிழ்ச் சமயத்தில் கலக்கத் தொடங்கியது முதல், சமய மறுமலர்ச்சிக் காலம் என வரலாறு கூறும் கி.பி.9ஆம் நூற்றாண்டு வரை, பல்லாற் றானும் தமிழ்ச் சமயத்தை அழித்து இந்து சமயமாக உருவெடுத்தது. சுருங்கச் சொல்லின், ஆரியர் வருமுன் தமிழகத்தில் இருந்த சமயம், தமிழ்ச்சமயம் என்றும், ஆரியர் வந்தபின் மாற்றம் செய்யப்பட்ட சமயம் இந்து சமயம் என்றும் அழைக்கப்படு கின்றன. இன்று, இந்து சமயமே தமிழ்ச் சமயத்துக்கு முன்னோடி என்றும், வடமொழியினின்றே தமிழும் தோன்றியது என்றும், வடமொழியில் ஓதப் பெறும் மந்திரங்களே வலிமையுள்ளனவென்றும், அதுவே தேவர்கள் மொழியென்றும், தமிழ் மொழியில் சொல்லப்படும் மந்திரங்கள் வலிமையற்றவை யென்றும், கடவுள்கள் அவற்றைக் கேட்பதில்லை என்றும் பலவாறு கூறி தமிழ்ச் சமயத்தைத் தமிழ் நாட்டிலேயே புறந்தள்ளிவிட்டனர். தமிழ் ஒரு நீச பாசையென்று இந்து சமயத்தலைவர்கள் வெளிப் படையாகப் பேசியும் வருகின்றனர். கால ஓட்டத் தில், தமிழ்ச் சமயம் பற்றிய ஆய்வுகளும் முயற்சி களுமே, அதனை நிலைகொள்ள செய்யும். இல்லா விடில் ஆரியமே அனைத்துக்கும் மூலம் என்ற கொள்கை நிறுவப்பட்டுவிடும்.

**ம. சோ. விக்டர்.**

*‘எபிரேயத்தின் தாய்மொழி தமிழே’ என்ற நூலிலிருந்து...*

●

---

## வீர வணக்கம்

விரதம் இருந்து பெத்த புள்ள
பத்து மாசம் சுமந்த புள்ள
படிக்க வச்சி ஆளாக்கி
நாட்டுக்காக அனுப்பி வச்சு
பல கனவுகளை அவன்மேல திணிச்சு வச்சு
வீட்டுக்கு ஒரு புள்ளய நாட்டுக்கு கொடுத்துட்டு
அவன் புள்ள எங்களை கேள்வி கேட்குதே
அப்பா எப்ப வருமுன்னு அழுது அடம் பிடிக்குதே
ஆறடி உயரமா அனுப்பி வைச்சோமே
பொட்டலமா வந்து சேர்ந்ததே
மனிதன் மனிதனைக் கொல்வது நியாயமா
தீவிரவாதம் மனிதனை கொலை செய்யும்
கொடூரத் தொழிலா? இதற்கு முடிவில்லையா?
எம்புள்ளைக்கு நேர்ந்த கதி இனி
யாருக்கும் வேண்டாமய்யா
தீவிரவாதத்துக்கும் தேர்தல் நேரப் போருக்கும்
சாவுமணி அடிக்கும் வீரர்களை உருவாக்குவோம்.

**வாணியம்பாடி தியாகராஜன்.**
9962082032.

# சாதிப்போம்!



வாருங்கள் சாதிக்கலாம்
எப்படி சாதிப்பது
எதில் சாதிப்பது

பிறர் செயல் பார்த்து
அவரை நிலை அடைய
எடுக்கும் எம் முயற்சியும்
சாதிப்பின் பாதிப்பே.

அக்காலம் தொட்டு
இக் காலம் வரை
சரித்திரத்தில் இடம்
பெற்றவர்கள் எல்லாம்
சாதித்தவர்களே.

அவர்கள்
சாதித்த சாதனைகளை
பற்றி பெருமை பேசுவதை
நான் விரும்பவில்லை.

அவர்கள் சாதித்த
சாதனைகளின் பலன்களை
நாம் இன்னும் அனுபவித்துக்
கொண்டு இருக்கிறோம் அல்லவா
அதுவே அவர்களின் சாதனை.

தாமஸ் ஆல்வா எடிசனின் சாதனை
மின்சாரம் இல்லை என்றால்
உலகமே இல்லை என்றாகிவிட்டது

இதுபோல் சொல்லிக்
கொண்டே போகலாம்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும்
வெவ்வேறு திறமைகள்
அதில் உன் திறமை என்ன
என்று அறிவதே
நம் சாதனையின்
முதல்படி அதை
முறைப்படி செய்தால்
நாம் சாதிப்பது நிச்சயம்.

தனக்குள் இருக்கும்
திறமைகளை மறந்து
இறந்த சடலம் போல்
உறங்கிக் கொண்டு இருக்கும்
மன ஊனமுற்றோர் மத்தியில்

எவர் ரெஸ்ட் எடுத்தால் என்ன,
நான் எவரெஸ்ட் ஏறியே தீருவேன் என்று
அதை நோக்கிச் சென்று
வென்றவர் போல் நாம்
இல்லை என்றாலும்

தனக்குள் இருக்கும்
திறமையைக் கொண்டு
அதில் எவரெஸ்டின்
உயரத்தை அடையலாமே.

பொங்கலும் பூரியும் தின்று
திங்களும் விடுமுறை எடுத்து
மங்களம் பாடித்திரியும்
மானுடர் மத்தியில்

விண்கலம் அனுப்பும் செயலில்
நம் கலாம் சாதித்தது போல்
நாம் இல்லை என்றாலும் உனக்குள்
இருக்கும் திறமையைக் கொண்டு
அதில் விண் உயர விரும்பலாமே.

இங்கு சற்று யோசிப்போம்
நம் திறமையை நாம் முதலில்
நேசிப்போம்.

அதை யாதென்று கண்டு
அதில் பயின்று
தடைகள் மேல் ஏறி நின்று
வெற்றியின் நுனி வரை சென்று
இறுதியில் வென்று
நீ சாதிப்பதே நன்று.

திறமை உண்டு
உனக்கும் எனக்கும்
இன்று இச்செயலின் தொடக்கம்
என்று கூறி முடிக்கிறேன்.
நன்றி! வணக்கம்.

**சகோ. காரை. சகா.**



# பறவைகள்

## எப்படிப் பறக்கின்றன? ஓர் ஆய்வு

பறவைகள் பறப்பதை நாம் பார்க்காத நாள் இல்லை, இருந்தாலும் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்ற கேள்விக்குப் பழங்காலத்து மக்களால் விடைகாண முடியாத நிலை இருந்தது.

காற்றில் உயரத்திலே விடப்பட்ட ஒரு பொருள் நேரே நிலத்தில் விழுந்துவிடாமல், சறுக்கியபடி பறந்து வந்து இறங்குவதற்கு ஒருவகை அமைப்புத் தேவைப்படுகின்றது. அனால் நிலத்திலிருந்து காற்றிலே எழுந்து உயர்ந்து செல்லுவதற்கோ முற்றிலும் மாறுபட்ட வேறுவகை அமைப்புத் தேவைப்படுகின்றது. வானத்தில் பறப்பதற்கு முதன் முதல் முயற்சி செய்த மக்களுக்கு இவ்வுண்மை நன்கு புலப்பட்டடது. இந்த இருவேறு மாறுபட்ட அமைப்புகளையும் ஒன்று சேர்த்துக் காண முடியாத அவர்கள் கனமான கருவி களைக் காண் பதை விடுத்து, பலூன் போன்ற இலேசான கருவி களையே காண்பதில் காலத்தைச் செலவழித்துக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த இருவேறு அமைப்புகளையும் எப்படியோ இயற்கை பறவை களுக்கு அமைத்துத் தந்து இருக்கின்றது. காற்றை விடக் கனமான அந்தப் பறவைகள் பூமியின் இழுப் பாற்றலையும் பொருட்படுத்தாமல் காற்றிலே வட்ட மிட்டுச் சுழன்று திரிகின்றன. பின்னர் சறுக்கிய படியே கீழே தாழ்ந்து மீண்டு தரையில் இறங்கி விடுகின்றன.

காற்றினும் கனமான எந்தப்பொருளும் காற்றிலே பறக்க வேண்டுமானால் குறிப்பிட்ட அளவு வேகத்தை ஏதாவது ஒருவழியில் பெற்றால் தான் முடியும். இயற்கையின் இந்த உண்மையே பட்டம் விடும் பையனை வெட்ட வெளியில் குறுக்கே விழுந்து ஓடும்படிச் செய் கின்றது. இன்று ஓடி எழுந்து பறக்கும் வானவூர் திக்கும் இவ் வுண்மை பொருந்தும்.

இத்தகைய வேகத்தைப் பெறுவதற்குப் பறவை களுக்கு அவைகளின் உறுதியான நீண்ட கால்கள் உதவி செய்கின்றன. பொதுவாகக் காற்றை உதைத்து மேலே எழுவதற்கு அகன்ற பெரிய சிறகுகள் நன்கு பயன்படுகின்றன. அவற்றுடன் கால்கள் நீண்டு இருப்பதும் எழுந்து பறப்பதற்கு பெருந்துணை செய் கின்றது. கொக்கு, நாரை போன்ற பெரும் பறவைகளின் கால்கள் நீண்டு இருப்பதால் நிலத்தில் நின்றபடியே அவற்றின் சிறகுகள் செயல்படத் தொடங்கி விடுகின்றன. இதனால் பறப்பது இவற் றிற்கு மிகவும் எளிதாகிவிடுகின்றது. இத்தகைய நீண்ட கால்களைப் பெற்றிராத காக்கை, புறா, பருந்து முதலிய பறவைகள் கால்களால் உந்தி மேலே பாய்ந்து எழுந்த பின்னர் தான் சிறகடித்துக் கொள்ள முடியும். அவை போன்றே நீரின் மேற் பரப்பில் மேய்ந்து திரியும் இயல்புடைய காட்டு அன்னம், நீர்வாத்து முதலியவை நீரின் மேல் மட்டத்திலிருந்து உந்தி எழுந்து, உயர்ந்து சிற கடித்துக்

கொண்டு பறந்து விடுகின்றன. இத்தகைய பறவைகளின் சிறகுகள், சிறிதாகவும் விறைப்பாகும் கத்தி முனை போல இருப்பதால் அவை 'ஹெலி காப்டர்' ஊர்தியின் விசிறி போன்று 'விர்ர்' என்று விரைந்து செயல்பட்டு பறவையினை மேலே உயர்த்திக் கொண்டு போய் விடுகின்றன. ஆனால் எல்லா நீர்ப்பறவை களாலும் இப்படிச் செய்ய முடிவதில்லை. இவற்றின் உடல் அமைப்பு நீருள் மூழ்குவதற்குத் தகுந்த வகையில் சற்று மாறி அமைந்திருக்கிறது. கால்கள் மூழ்குவதற்கு உதவும் வகையில் உடலின் பின்பகுதியில் தள்ளிப் பொருத் தப்பட்டிருப்பதால் இவற்றால் தரையில்கூட நன்றாக நடக்க முடிவதில்லை.

உடலின் கனம் முன்புறம் சென்று அழுத்துவதால் தள்ளாடித் தள்ளாடி நடக்கின்றன. எழுந்து பறக்க முயலும் போது சிறகுகள் மிகுதியான கனத்தைச் சுமக்க வேண்டியிருக்கின்றன. இக்காரணங்களால் இப் பறவைகள் நீரிலிருந்து விடுபட்டு நேரே காற்றில் எழ முடிவதில்லை. எனவே, இப்பறவைகள் ஒரு நல்ல முறையைக் கையாளுகின்றன. சிறகுகளை மட்டும் நீருக்கு வெளியே எடுத்து அடித்துக் கொண்டு, கால்களையும் உடலின் பெரும் பகுதியையும் நீரிலேயே பட்டிருக்கும்படி இழுத்துக் கொண்டு விரைந்து ஓடுகின்றன. இதனால் சிறகுகள் தாங்க வேண்டிய கனத்தைத் தண்ணீர் தாங்கிக் கொள் கிறது. குறிப் பிட்ட அளவு வேகங் கிடைத்த பின்னர், நீரினின்றும் விடுபட்டு காற்றிலே உயர்ந்து பறக்கத் தொடங்கி விடுகின்றன. காற்றிலே எழுந்த பிறகு அவற்றின் உறுதி யான சிறகுகள் விரைந்து அடித்துக் கொள்வதால் எத்தகையத் தடையுமின்றி எளிதில் பறந்து திரிகின்றன.

பறவைகள் பறப்பதற்கு, எழுவது ஒரு கலையாகத் தோன்றுவது போலவே, அவை மீண்டும் கீழே இறங்கு வதும் ஒரு கலையாகத் தோன்றுகின்றது. பறவைகள் அவை சேர வேண்டிய இடத்தைப் பொறுத்து தரையிலோ, மரத்திலோ, தண்ணீரிலோ சென்று இறங்குகின்றன. பொதுவாக இறங்க விரும்பும் பறவை, சிறகுகளை ஏற்ற கோணத்தில் வைத்துக் கொண்டு, படிப்படியாக உயரம் குறைந்து தாழ்ந்து வருகின்றது. வேகத்தைக் குறைப்பதற்காக அடிவயிற்று இறகுகளைச் சிலுப்பி வைத்துக் கொள்கின்றது. காற்றில் நன்கு உரசுவதால் அச்சிறகுகள் பறவையின் வேகம் படிப் படியாகக் குறைகின்றது. இதற்கு மேலும் எச்சரிக்கை யாக இறங்க வேண்டுமென்றால், சிறகுகளை எதிர்ப்புற மாகப் 'படபட' என அடித்து வேகத்தை அறவே நிறுத்திவிட்டு இறங்குகின்றது. இப்படி வேகத்தைக் குறைப்பதில் பறவையின் வால் சிறந்த பங்கு எடுத்துக் கொள்கின்றது.

அகல விரிந்து கீழே வளையும் அதன் வால் வேகத்தைக் குறைக்கும் சிறந்த தடையாக அமை கின்றது. இறங்கும் இடத்தைத் தெரிந்து கொண்டதும் பறவை உடலை மேலே உயர்த்திக் கால்களை முன்னே நீட்டி இறங்கி விடுகின்றது. நீர்ப்பறவைகள் நீரிலே இறங்கி மிதந்தபடியே நிற்கின்றன. சிட்டுக்குருவி, வானம் பாடி போன்ற சிறு பறவைகள் மெல்லிய பசுங் கொம்புகளேயே இறங்குவதற்குத் தேந்தெடுக் கின்றன. அவை வேகமாக வந்து அமர்ந்தாலும் அக்கிளைகள் வில்போல வளைந்து வளைந்து ஆடி அவற்றிற்குச் சிறிதும் அதிர்ச்சி இல்லாமல் செய்கின்றன. நாரை, கொக்கு போன்ற பெரும்ப பறவைகள் தங்கள் பெரிய சிறகுகளை அகல விரித்துப் பாராசூட் பிடித்துக் கொண்டு இறங்குவது போல, மரக்கிளைகளிலும் நீர்நிலை களின் கரைகளிலும் நீண்ட கால்களுக்குச் சிறிதும் துன்ப மில்லாமல் இறங்குகின்றன.

ஒன்பதாம் நிற்றாண்டின் தொடக்கத்தில் 'தமிழ்ந ாட்டில்' வாழ்ந்திருந்த 'திருத்தக்க தேவர்' தாம் இயற்றிய 'சீவக சிந்தாமணியில்' காற்றைவிடக் கனமானதொரு அமைப்பை மக்கள் பயன்படுத் தலாம் என்பதைக் கற்பனையில் கண்டார். மயில் போன்று அவரால் செயற்கையாக அமைக்கப்பட்ட அப்பொறி, பறவை யினைப் போன்றே கால்களையும் சிறகுகளையும் பெற்றிருக்கின்றது. அதிலுள்ள திருகாணிப் பொறியை வலமாகத் திருப்பினால் மயில் ஊர்தி மண்ணிலிருந்து விடுபட்டு விண்ணில் எழும். திருகாணியை இடமாகத் திருப்பினாலே, காண்பவர் வியக்கும்படி கால்களைக் குவித்துக் கொண்டு நிலத்திலே வந்து இறங்கிவிடும்! இச் செய்திகளை,

*"பண்தவழ் விரலில் பாவை பொறிவலம்*
*ரிப்பப் பொங்கி*
*விண்தவழ் மேகம்போழ்ந்து விசும்பி இடைப்*
*பறக்கும் வெய்ய*
*புண்தவழ் வேல்கண் பாவை பொறிஇடம்*
*திரிப்பத் தோகை*
*கண்வர் மருளவீழ்ந்து கால்குவித்து*
*இருக்கும் அன்றே!"*

என்ற அடிகளில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இத்தகைய அறிவியல் அடிப்படையில் செயற்கைப் பறவையினை அமைத்த சிந்தாமணி ஆசிரியர், இயற்கையில் பறவைகள் எழுந்து, பறந்து, இறங்கும் நுட்பங்களை எத்துணையளவிற்குக் காட்சித் திற னுடன் கண்டிருக்க வேண்டும் என்பதை எவராலும் உணராமல் இருக்க முடியாது.

எனவே, பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்ற கேள்விக்குப் பழந்தமிழன் விடைகூறத் தெரிந்தே இருந்தான் என்பது இதனால் தெளிவாகத் தெரி கின்றதன்றோ?

தொகுப்பு : **பீமபெருமாள்.**

# நாகசாமியை நீக்க வேண்டும் மு.க.ஸ்டாலின்





**வே**தங்களில் இருந்து திருக்குறள் வந்தது" என்று திருவள்ளுவரை சிறுமைப்படுத்தி, திரிவு வாதத்தை முன் வைத்த முன்னாள் தொல்லியியல் அதிகாரி நாகசாமியை, செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும் ஜனாதிபதி விருதுகளைத் தேர்வு செய்யும் குழுவில் உறுப்பின ராக நியமித் திருப்பதற்கு தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழிக்கு எதிராகவும், தமிழ் கலாச் சாரத்தினை, தன் மனம்போன போக்கில் திரித்து பா.ஜ.க. மற்றும் மதவாத சக்திகளின் கவனத்தைத் தன் பால் திருப்பிடும் நோக்கில் எழுதிவரும் அவருக்கு எற்கனவே பத்மவிபூசன் விருதை வழங்கி கவிரவித்துள்ள பிரதமர் நரேந்திரமோடி தலைமை யிலான மத்திய பா.ஜ.க. அரசு, இப்போது செம் மொழி தமிழாய்வு நிறுவனத்திலும் ஒரு பொறுப் பினை வழங்கி செம்மொழித் தமிழுக்கும் பேரிழுக்கு ஏற்படுத்த முயற்சி செய்தி பார்த்திருக்கிறது.

2016 - 2017 முதல் செம்மொழி தமிழாய்வு நிறுவன விருதுகளையும் அறிவிக்காமல் தமிழ் அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் அங்கீகாரம் வழங்குவதையோ, விருதுகள் வழங்கி கவுரவிப் பதையோ, கருணாநிதி பெயரில் அமைந்துள்ள சிறப்பு விருதையோ, பா.ஜ.க. அரசு வஞ்சக எண்ணத்துடன் தடுத்து நிறுத்தியிருந்தது.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் வருகின்ற நேரத்தில் அவசர அவரசமாக தமிர் நாட்டு மக்களை இதன் மூலமாகவும் ஏமாற்றிவிட வேண்டும் என்ற தீய உள்நோக்கத்துடன் இப்போது 'விருதுக்குழு' ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னைத் தமிழாம் செம்மொழித் தமிழ் மீது அடர்த்தியான நஞ்சைக் கக்கும் நாகசாமி, செம் மொழி தமிழாய்வு விருதுகளை தேர்வு செய்யும் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்.

இந்த தேர்வுக்குழுவுக்கு முன்னாள் இந்திய தேர்தல் ஆணையர் கோபால்சாமி தலைவராக இருந்தாலும், மருதாசல அடிகளார் போன்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தாலும் தமிழ்மொழியை சிறுமைப்படுத்தி சமஸ்கிருதத்துக்கும், வேதங் களுக்கும் தடையின்றி தாலாட்டுப்பாடிவரும் நாக சாமிக்கு ஏன் அக்குழுவில் இடம் அளிக்கப்பட் டுள்ளது. தமிழர்களின் பண்பாட்டை வெளிக் கொணர ஆதிச்சநல்லூர், கீழடி அகழ்வாராய்ச்சி களை இன்னும் மூடி மறைத்து வருகிறது மத்திய பா.ஜ.க. அரசு. இப்போது செம்மொழித் தமிழ் மீது உள்ள வெறுப்பை மட்டுமே இந்த நியமனம் எடுத்துக் காட்டுகிறது.

அகவே, செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் ஜனாதிபதி விருதுகள் தேர்வு செய்யும் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள நாகசாமியை உடனடியாக பதவிநீக்கம் செய்துவிட்டு, ஆழமான தமிழ்ப் பின்னணியும், ஆராய்ச்சிப் புலமையும் மிக்க நல்ல தமிழறிஞர்களை அக்குழுவில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று மத்திய மனிதவள மேம் பாட்டுத்துறை மந்திரி பிரகாஷ் ஜவடேகரை கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் பரபரப்பை பயன்படுத்திக் கொண்டு, தமிழர்களின் உணர்வுடன் 'விபரீத விளையாட்டு' நடத்த வேண்டாம் என்றும் மத்திய பா.ஜ.க. அரசை எச்சரிக்க விரும்புகிறேன். •

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கூறியுள்ளார்.

ஏப்ரல் 1 முதல் மத்திய, மாநில அரசுகள் இன்சூரன்ஸ் கம்பெனிகள், போக்குவரத்து துறை மற்றும் அரசும் ஒன்று சேர்த்து உச்ச நீதிமன்றத்தின் கடுமையான முடிவுகளை அமல்படுத்தும்.

1. எந்த பயணியும் ஆட்டோவில் செல்லும்போது போக்குவரத்து துறை வரையறுக்கப்பட்ட வரம்புக்கு அதிகமான மக்களுடன் பயணம் செய்து விபத்து ஏற்பட்டால் இன்சூரன்ஸ் இழப்பீடு தொகை வழங்கப் படமாட்டாது. அதேபோல், விபத்து நடந்தால் பயணம் செய்த எல்லா பயணிகளும் அரசின் திட்ட பயன்களை பெற முடியாது. விபத்தில் பாதிக்கப்பட்ட பயணி களுக்கு எந்த இழப்பீடுத் தொகையும் வழங்கப்பட மாட்டாது.

2. இந்தச் சட்டம் இரு சக்கர வாகனம் ஓட்டுனர் களுக்கு பொருந்தும்.

3. விபத்து நடந்தபோது தலைக்கவசம் அணியாமல் இருந்தால் விபத்து இன்சூரன்ஸ் இழப்பீடு வழங்கப் படமாட்டாது.

4. ஒருவர் வாகனத்தை சாலையின் தவறான பக்கத்தில் ஓட்டி, சரியான பக்கததில் ஓட்டும் நபரோடு விபத்து ஏற்படுத்தினால் தவறான பக்கத்தில் ஓட்டும் நபருக்கு விபத்து இன்சூரன்ஸ் இழப்பீடுத் தொகை வழங்கப்படமாட்டாது மற்றும் சரியான திசையில் ஓட்டும் வாகனத்தின் மீது எந்த ஒரு வழக்கும் பதிவு செய்யப்படமாட்டாது.

5. விபத்தின்போது குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவருக்கு எந்த வித இன்சூரன்ஸ் இழப்பீடுத் தொகையும் வழங்கப்படமாட்டாது.

6. தவறான திசையில் ஓட்டும் வாகனத்தால், சாலையை உபயோகிக்கும் மற்றவர்களுக்கு காயமோ, இறப்போ ஏற்பட்டால், தவறான வாகனத்தை ஓட்டிய நபர் 20 இலட்சம் வரை இழப்பீடுத் தொகை, அவருடைய பெயரில் உள்ள சொத்துக் களின் மூலம் வழங்க வேண்டும் அப்படி இழப்பீடு வழங்கத் தவறினால் 14 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும். அவருடைய ரத்த சம்பந்த உறவினர்களின் ஓட்டுனர் உரிமமும் 7 வருடங்கள் ரத்து செய்யப்படும்.

7. வாகன ஓட்டுநர் கைபேசியில் பேசிக்கொண்டு விபத்து ஏற்படுத்தினால் அதே தண்டனை வழங்கப் படும்.

8. யாராவது செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்த வழக்கில் இருந்து விடுபட அழுத்தம் தந்தால், 5 வருடங் களுக்கு ஓட்டுனர் உரிமம் ரத்து செய்யப்படும்.

9. இந்த வழக்குகளில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க தவறும் அதிகாரிகள் மூன்று ஆண்டுகள் பணி நீக்கம் செய்யப்படுபவர். அந்த மூன்று ஆண்டுகள் அரசு உதவி எதுவும் கிடைக்காது.

10. மேலே சொன்ன தண்டனைகள் அதிவே கமாக இயக்கப்படும் வாகனங்களுக்கும் பொருந்தும்.

11. இருக்கை பெல்ட் அணியாமல் கார் ஓட்டும் ஓட்டுநர்களுக்கு விபத்தின்போது எந்த விதமான இன் சூரன்ஸ் இழப்பீடுத் தொகையும் அளிக்கப்பட மாட் டாது.



# உச்ச நீதிமன்றத்தின் குறிப்பிடத்தக்க தீர்ப்பு



# மகிழ்ச்சி

மனைவியை மகிழ்ச்சியாக வைத்திருக்க போராடும் அன்பார்ந்த கணவன்மார்களும், எங்கு தொலைத் தோம் மகிழ்ச்சியை என்று தெரியாமல் தேடும் மனைவிமார்களுக்குச் சமர்ப்பணம்.

பிரெஸ்னோ பசிபிக் பல்கலைக்கழகத்தில் ஒரு சொற்பொழிவாளர் கூட்டத்தில் ஒரு தம்பதியரில் ஒரு பெண்மணியை பார்த்து கேட்டார்.

“உங்கள் கணவர் உங்களை மகிழ்ச்சியாகப் பார்த்து கொள்கிறாரா?”

அருகிலிருந்த கவர் நிமிர்ந்து, நம்பிக்கையுடன், அமர்ந்தார், காரணம், மனைவி அவரிடம் எந்தப் புகாரும் சொன்னதே இல்லை. அவர் மகிழ்ச்சி யாகவே இருந்தார்.

ஆனால், அந்த மனைவி தெளிவாக” இல்லை, என் கணவர் என்னை சந்தோஷமாக வைத்துக் கொள்ளவில்லை'' என்றார். கணவர் அதிர்ந்தார். ஆனால், மனைவி தொடர்ந்தார்.

“என் கணவர் என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க வில்லை. என்னை மகிழ்ச்சிப்படுத்திய தும் இல்லை. ஆனால், நான் மகிழ்ச்சியாக இருக்கி றேன், நான் மகிழ்ச்சி இருப்பது என்பது அவரை சார்ந்தது இல்லை. என்னையே சார்ந்தது. நான் மகிழ்ச்சி இருக்கிறேனா என்பது நான் சம்பந்தப் பட்ட விசயம்.

“வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சந்தோஷ மாக இருப்பது என்பது என் முடிவு. அடுத்தவரால் நான் சந்தோஷமாக இருப்பேன் என்றால், இன்னின்ன தருணங்களில் நான் சந்தோஷமாக இருப்பேனென் றால், நான் பெரும் பிரச்சனையில் இருக்கிறேன் என்று பொருள்.

“நம்மைச் சுற்றியுள்ள எல்லாம் மாறிக் கொண்டே இருக்கின்றன மனிதர்கள், செல்வங்கள், என் உடல், தட்பவெப்பம், என் முதலாளி, சந்தோஷங்கள், நண்பர்கள் எனது உடல் மற்றும் மன ஆரோக்கியம் எல்லாமே, இது ஒரு நீண்ட பட்டியல்.

“என்ன ஆனாலும் மகிழ்ச்சியாக இருப்பது என்பது நான் எடுத்த முடிவு. நிறைய இருந்தாலோ, குறைவாக இருந்தாலோ என் மகிழ்ச்சி குறைவதில்லை. வெளியே சென்றாலோ, வீட்டில் இருந்தாலோ, ஏழையாக இருந்தாலோ, பணக்காரியாக இருந்தாலோ என் மகிழ்ச்சி குறைவதில்லை“.

“திருமணத்துக்கு முன்னும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தேன். பின்னும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னை பற்றி எனக்கே மகிழ்ச்சியாக இருப்பதால் மகிழ்ச்சியாக இருக்கிறேன்“.

“என் வாழ்க்கையை நான் விரும்ப காரணம் என் வாழ்க்கை மற்றவர்களதை விட சுலபமானதாக இருப்பதால் அல்ல. நான் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியாக இருப்பது என்று தீர்மானித்திருந்தால், நானே என் மகிழ்ச்சிக்குப் பொறுப்பு.

“இதை நான் ஒரு தீர்மானமாக மனதில் கொள்ளும் போது, என்னைச் சுமக்கும் பொறுப்பை மற்றவர்களிட மிருந்து நீக்குகிறேன். இது அனை வரது வாழ்க்கையை யும் எளிதாக்குகிறது. அதனால் தான், எங்கள் திருமண வாழ்க்கை இத்தனை ஆண்டுகளாக மகிழ்ச்சியாக இருந்து வருகிறது“ என்றார்.

உங்களை சந்தோஷமாக வைத்துக்கொள்ளும் பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்காதீர்கள் வெயிலோ, மழையோ, உடல் சரியில்லையா, பணமில்லையோ, காயப்பட்டிருந்தாலோ, விரும்பப்படவில்லையோ உங்கள் மனதில் உள்ள மகிழ்ச்சியை விட்டுக் கொடுக் காதீர்கள். உங்களை நீங்கள் மனதார மதிக்கும்வரை உங்களுக்குள் நீங்களே மகிழ்ச்சியாவீர்கள். மகிழ்ச்சி உள்ளே உள்ளது. வெளியில் இல்லவே இல்லை.

**எஸ்தர் ரோஸ்லின்**



# யார் இந்துக்களுக்கு எதிரி?

இதுவரை வழங்கப்பட்டிருக்கும் 48 பாரத் ரத்னா விருதுகளில் 23 விருதுகள் பார்ப்பனர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. மொத்த மக்கள் தொகையில் மூன்று சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும் பிராம ணர்களுக்கு மட்டும் ஏன் இத்தனை விருதுகள். பிற சாதி இந்துக்களுக்கு யார் எதிரி?

தமிழகத்திலிருந்து கிரிக்கெட் விளையாடச் சென்றவர்களில் பிராமணர்கள் அல்லாதவர்கள் எத்தனை பேர்?

ஹெச்.ராஜா பாஜகவின் தேசியச் செயலாளர். ஆனால், தி.நகரில் இருக்கும் பா.ஜ.கவின் தலைமை அலுவலகமான கமலாலயத்துக்கு எத்தனை முறை சென்றிருக்கிறார் என்று யாருக்காவது தெரியுமா? நாடார் பெண்ணான தமிழிசை தலைவராக இருக்கும் வரை அந்த அலுவலகத்துக்குச் செல்ல மாட்டேன் என்று அவர் பிடிவாதம் பிடிப்பது உண்மையா இல்லையா? விசாரித்து உண்மையைத் தெரிந்து கொண்டால் புரியும் யார் இந்துக்களுக்கு எதிரி என்று.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும் போது கூட அமர்ந்திருந்த சங்கராச்சாரியார் தமிழர்களுக்கு எதிரி இல்லையா? கி.பி. 1650 வரை தமிழ் பண்டாரங்கள் பூசை செய்த பழநி ஆண்டவருக்கு ராமப்ப அய்யர் என்ற திருமலை நாயக்கரின் படைத்தளபதி 'பிராம ணரில்லாதவரிடம் பிரசாதம் வாங்க மாட்டேன்' என்று சொல்லி பார்ப்பனர்களைக் கோவிலுக்குள் கொண்டு வந்து பண்டாரங்களை வெளியில் அனுப்பினார். தமிழர்களுக்கு யார் எதிரி?

2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான திமுக ஆட்சியில் மட்டும் சுமார் 5000 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டி ருக்கிறது. குடமுழுக்கு என திமுக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தொகை 550 கோடி ரூபாய்கள். அதற்கு முந்தைய அதிமுக ஆட்சியில் ஒதுக்கப் பட்ட தொகை வெறும் 140 கோடி ரூபாய். யார் இந்துகளுக்கு எதிரி?

மணமகளிடம் திருமணத்தின் போது 'நீ முதலில் சந்திரனுக்கு உரியவள், பின்பு கந்தர்வன் உன்னை அடைந்தான். அவனுக்குப் பிறகு அக்னி உன்னை அடைந்தான், இனி நான்காவதாக இவன் உனக்குக் கணவன் என்று மந்திரம் சொல்லி அதைத் திருமணத் தில் ஓதி இந்துப் பெண்களை விபச்சாரி களாக மாற்றி வைப்பது யார்? யார் இந்துக்களுக்கு எதிரி? (இந்த விளக்கத்தைக் கொடுத்தவர் சங்கராச் சாரியார்)

காலங்காலமாக தமிழர்களின் மரபு சார்ந்த கோவில்களில் ஆடு கிடா வெட்டக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்து தமிழர்களின் பாரம் பரியத்தை அழிக்க முயன்றது யார்? இந்துக்களுக்கு எதிரி யார் என்று புரிகிறதா? காலங்காலமாக தமிழர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த கூட்டம் இன்றைக்கு தமிழக அரசையும் அடிமைப்படுத்தியிருக்கிறது. தமிழர்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். வரலாறு நெடுகவும் தமிழர்களுக்கும், சாதி இந்துக்களுக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் தொடர்ந்து துரோகம் செய்து, ஏமாந்தவர்களை அடிமைகளாக்கி, தமிழர்களின் உரிமைகளை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்த அதே சிறு பிராமணக் குழுதான் 'நாம் எல்லோரும் இந்துக்கள்' என்று குரல் எழுப்பி, ஏமாற்றி ஓட்டு வாங்கும் வித்தையைச் செய்து கொண்டிருக்கிறது. அதனைச் சுட்டிக் காட்டுகிறவர் களையெல்லாம் 'இந்துக்களின் எதிரி' என்று முத்திரை குத்துகிற பார்ப்பனர்களும், அவர்களது பாஜகவும் அவர்களுக்குத் துணையாக இருக்கும் கட்சிகளும் தான் தமிழர்களுக்கும் தமிழகத் தைச் சார்ந்த இந்துக்களுக்கும் எதிரி.

**தமிழர்களே விழிப்பாக இருங்கள்.**

## சுவர்களில் ஏன் வறட்டி தட்டி காய வைக்கப்படுகிறது?



பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வீட்டுச்சுவரின் வெளிப்புறத்தில் வறட்டி காய வைக்கும் பழக்கம் தமிழகம் முழுவதும் சிற்றூர்களில் காணப்பட்டதை நாம் அறிவோம். அது ஏன்? அதற்கு முக்கியக் காரணம், வறட்டிகளால் சூழப்பட்ட சுவர்கள் வெளியில் எந்த தட்பவெப்ப நிலை இருந்தாலும், சரியாக 28.35 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையை வீட்டிற்குள் வழங்கும். இந்த விஞ்ஞான உண்மை நம்மைத் திகைக்க வைக்கும்.

அப்போதெல்லாம் தடுப்பூசியோ, மருந்து மாத்திரையோ தமிழகத்தில் இல்லை. காரணம் பசு வறட்டியில் உள்ளது. நாட்டு மாடுகளின் ஏ2 சாணம் என்பது ஒரு மிகச்சிறந்த கிருமி நாசினி என்பது அறிவியல். 18 மாதங்கள் நிரம்பிய ஒவ்வொரு பசுவின் சாணமும் ஆயிரம் தடுப்பூசிக்கு சமம். அப்படியான சாணத்தை தனித்தனியாக ஒவ்வொருவர் முகத்திலும் தனித்தனியாக அடிக்க முடியாது என்பதால், வீட்டுச்சுவற்றில் அடித்து வந்தனர். இதன்மூலம் முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு வளையத்தில் நம் தாத்தா பாட்டி காலம் வரை வாழ்ந்திருக்கிறார்கள்.

அதுபோல, வளி மண்டலத்தில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் மற்றும் காஸ்மிக் கதிர்கள், இந்த நன்கு காய்ந்த வறட்டியில் படும்போது, மின்காந்த சக்தி உந்தப்பட்டு அந்த வீடே அணுக்கதிர்கள் கூட துளைக்க முடியாத ஒரு எஃகு அரணாக மாறிப்போகும். ஆனால், இதன் பலன் 15 நாட்களுக்கு மட்டுமே. இதனாலேயே சோழர்களின் கோட்டையை ஆங்கிலேயர்களால் வீழ்த்த முடியவில்லை என்பது தனிக்கதை.

மேலும், இம்மாதிரியான வறட்டி தட்டும் பழக்கம் கைகள் மூலமாக உடலில் ஏற்படும் கெட்ட கொழுப்புகளை அகற்றி சர்க்கரை நோயை கட்டுக்குள் இருக்க வைத்தது. சுற்றிலும் வறட்டிகளைக் கொண்ட வீடுகளில் நாற்பத்தி எட்டு நாட்கள் புழங்கி வந்தால் அலர்ஜி, கேன்சர், இருதயக் கோளாறு போன்றவை சரியாகும் என சித்தர்கள் தெரிவித்துள்ளனர்.

**உமாமகேசுவரி**

## *அரசு நிலங்களில் 3,168 வழிபாட்டுத் தலங்கள்?*

*அரசு நிலங்கள், பொதுச்சாலைகளை ஆக்கிர மித்து, வழிபாட்டுத் தலங்களை கட்டக் கூடாது என்ற அரசாணையைப் பின்பற்ற உத்தரவிடக்கோரி தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் இராமகிருஷ்ணன் அவர்கள் கடந்த 2005ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.*

*வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், அரசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், நீர்நிலைகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்கள் குறித்த புள்ளி விவரங்களை அறிக்கையாக தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருந் தார்.*

*இந்த நிலையில் அந்த வழக்கு நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக நகராட்சி நிருவாகத் துறையின் துணைச் செயலாளர் ராமநாதன் அறிக்கை தாக்கல் செய்தார். அதில், 'சென்னை உட்பட பன்னிரெண்டு மாநகராட்சிகள், நூற்று இருபத்தியிரண்டு நகராட்சிகள், பேரூராட்சிகளில் நீர்நிலைகள், அரசு நிலங்கள், சாலைகள், நீர்வழித் தடங்களை ஆக்கிரமித்து 3,168 வழிபாட்டுத் தலங்கள் கட்டப்பட்டுள்ளது. இதில் 3,003 இந்துக் கோயில்களும், 131 கிறித்தவ ஆலயங்களும், 27 மசூதிகளும், பிற மத்தைச் சேர்ந்த 7 வழிபாட்டுத் தலங்களும் அடங்கும்' என்று கூறப்பட்டுள்ளது. விசாரணைக்குப் பின்னர், வழக்கை நீதிபதி தள்ளி வைத்தார்.*

●

*போர்த்தல் உடை நீக்குதல் பொடித்துகண் மெய்பூசல்*
*கூர்த்த பணி ஆற்றுதல் குளித்து அழலுள் நிற்றல்*
*சார்த்தர் இடு பிச்சையர் சடைத் தலையர் ஆதல்*
*வார்த்தை இவை செய்தவம் மடிந்து ஒழுகல் என்றான்.*

உடல் முழுவதும் காவி நிறத்திலால் ஆன ஆடைகளை உடுத்திக் கொள்ளுதல், ஆடைகளே இல்லாமல் அலைவது, தமது உடல் முழுவதும் சாம்பலைப் பூசிக்கொள்ளுவது, குளிர், வெயில், என்றெல்லாம் பாராது உடலை வருத்துதல், இல்லறம் கடைபிடிப்போரிடம் பிச்சை வாங்கி உட்கொண்டு வாழ்வது, சடைமுடியோடு திரிவது என்பதும் உண்மையான தவ வாழ்க்கை ஆகாது. தமது ஐம்பொறிகளையும் அடக்கி, ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் வாழ்வதே உண்மையான தவ வாழ்க்கை ஆகும்.

குண்டலகேசி (பத்தாதீசா)



## வாய் பேசா கால்நடைகளின் பால் அன்பு கொண்டு பணியாற்றிய மருத்துவர்

டாக்டர். நா. நடராசன் – முதல்வர் (ஓய்வு) சென்னை கால்நடைக் கல்லூரி

பெயர் : நடராசன்

அரசுப்பணி : முதல்வர் (ஓய்வு) சென்னை.

பிறந்தநாள் : 04-11-1934

சொந்த ஊர் : பழநி, திண்டுக்கல் மாவட்டம்

தந்தை, தாய் : நாச்சிமுத்து, சீராய் அம்மையார்

வாழ்க்கைத்துணையர்: என். ஆர். லட்சுமி, ஆசிரியை (ஓய்வு)

**குடும்பத்தினர்:** இரண்டு மகன்கள், அமெரிக்காவில் குடியேற்றம் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டு மகள்கள், மருத்துவர்கள், சென்னையில் பணியாற்றுகின்றனர்.

**கல்வித்தகுதி :** பி.எஸ்.சி., பி.எச்.டி, எஃப் என் ஏ வி எஸ்.

**பணியாற்றிய காலங்கள்:** 33 ஆண்டுகள் (30-11-1994இல் ஓய்வு) விஞ்ஞான ஆராய்ச்சி மேற்கொண்டு 55 கட்டுரைகள், நூல்களைப் பதிப்பித்தவர்.

**மற்ற பட்டங்கள்:** முனைவர் பட்டம், விலங்கின மரபியல் துறையில் ஆய்வாளர், இந்திய விலங்கியல் அறிவியல் கழகம் ஃபெல்லோ ஆக எஃப் என் எ வி எஸ் பெருமைப்படுத்தியது. பத்து மாணவர்களை நெறிப்படுத்தி முனைவர் பட்டம் பெற வைத்தது.

**சிறப்புத் தகுதிகள் பெற்றது :** இந்திய கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் முதல்வர் கூட்டமைப்பு.

**சிறப்புச் சேவைகள் :** கால்நடை மருத்துவ விலங்கின மரபு இயலில் புதிய பாடங்களைப் புகுத்தியது.

‘சாண்டினோ’ என்ற கலப்பின உரோம ஆட்டினை உருவாக்கி விவசாயிகள் பயன்பாட்டுக்கு அளித்தது.

**வேறுதுறைகளில் நாட்டம்:** (அ) வேதாந்தமகரிசியின் ‘மனவளக்கலை’ மன்றத்தில் மிகவும் ஈடுபாடு உடையவர்.

(ஆ) அண்ணா நகர்த் தமிழ்ச்சங்கம் தமிழ்நாடு மூத்த குடிமக்கள் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினர். (இ) தந்தை பெரியாரின் கருத்துக்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் ‘சமூகநீதி’ கொள்கைகளைக் கடைபிடிப்பவர்.

தொடர்பு பேசி எண் : **9884603025**

**வி.ஜே.ஜார்ஜ்**
அமைந்தகரை, சென்னை.

## கனகசபை பிறைசூடி



சிறீலங்கா அரசாங்கத்தில் பணியாற்றிய கேப்டன் பிறைசூடி அவர்கள் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தன் அரசுப்பணியைத் துறந்தவர் கனகசபை பிறைசூடி அவர்கள்.

பிரிட்டீசு கப்பல் போக்குவரத்துச் சேவையில் கப்பல் அதிகாரியாக இருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் போரின் முன்னோடிகளில் ஒருவராக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகுவேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுடன் இணைந்து தொடக்க காலங்களில் இருந்தே விடுதலைப் போரில் பங்கு கொண்டு பணியாற்றினார்.

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதன் முதலாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் வளர்ச்சிக்காக வணிகக் கப்பல் நிறுவனத்தை உருவாக்கியதோடு மட்டுமல்லாது எமது அமைப்பின் அனைத்து கப்பல் போக்குவரத்துகளும் இவர் மேற்பார்வையிலேயே நடந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைவாசம் கண்ட பிறைசூடி அவர்கள் தன் இறுதி மூச்சுவரை தமிழீழ விடுதலைக்காகவே வாழ்ந்தார்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் நாமும் இணைந்து கொள்வதுடன் அமரர் கனகசபை பிறைசூடி அவர்களுக்கு நாட்டுப்பற்றாளர் என மதிப்பளிக்கப் படுகின்றது. •


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ.** 5,000/- **(முழுப்பக்கம்)**

# இந்து மதத்தை மட்டும் எதிர்த்தாரா பெரியார்?



இந்து மதத்தை மட்டுமே பெரியார் குறிவைத்தார் என்பதில் உண்மையில்லை. ஒரு மதமும் வேண்டாம் என்பதுதான் சரியான பேச்சும் திட்டமும் ஆகும். மதம் மக்களுக்கு விசம். மதம் மனிதன் ஒற்றுமைப்படுவதை தவிர்க்கிறது, ஆகையால் எல்லா மதங்களும் இந்நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும். நான் எல்லா மதங்களுக் கும் விரோதி தான் என 1936ல் கொச்சியில் நடந்த கூட்டத்தில் பேசினார் பெரியார். கடவுள், மத, சாஸ்திர, புராண இதிகாச ஒழிப்பிற்கு ஒத்துழைக்கும் என்பதால், புத்தர் சொன்னவற்றை மட்டும் ஆதரித்தார். அதுவும் அது கொள்கைதான் மதமல்ல என்ற விளக்கத் தோடு, அறிவு தான் குரு என்று புத்தர் சொன்னதை வழிமொழிந்தார். அதே சமயம் பவுத்தர்கள் பெயரளவில் தான் அவர் கொள்கைகளை அவர் பின்பற்றுகிறார்கள் என்ற விமர் சனமும் அவருக்கு இருந்தது. அவரின் பெரும்பான் மையான கருத்துகள் ஏன் இந்து மதத்தை மட்டும் குறி வைத்திருந்தன. காரணம் இங்கே பெரும்பான்மையினரின் மதமாக அதுவே இருந்தது. அதில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் ஒரு பெரும் கூட்டத்தையே பாதிக்கும் சங்கடங்களாக இருந்தன. அதனாலேயே அவர் தொடர்ந்து இந்து மதத்திற்கு எதிராக, கடுமையாக குரல் எழுப்பி வந்தார்.

இந்து மதம், வேத மதம் வேதம் கடவுளால் சொல்லப் பட்டது என்கி றார்கள். ஆனால் அதை ஏன் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் படிக்கிறார்கள். அவர்களுக்கு மட்டுமே வேதம் படைத்த கடவுள் எப்படி எல்லோருக்குமானவராக இருக்க முடியும். வேதங்களிலிருந்து தானே சாதிப்பிரிவுகள் வந்தது. அப்படி சாதியின் பெயரால் மக்களைப் பிரிக்கும் மதம் வேண்டாம் என்பது தான் பெரியாரின் அடிப்படையான வாதம். ஆனால் தான் வளர்த்த, ஆதரித்த குழந்தைகள் என்ன மதம் பயில வேண்டு மென்பதில் அவர் குறிக்கிடவே இல்லை. தங்களின் சிந்தனையால் அவர்கள் நாத்திகரானால் சரி என கடவுள் வாழ்த்தைக் கூட அவர் மறுக்கவில்லை.

**தமிழர்களை காட்டுமிராண்டிகள் என வர்ணித்தாரா பெரியார்?**

இது பெரும்பான்மையானவர்கள் வைக்கும் குற்றச்சாட்டு. ஆனால் உண்மை திராவிடத்தின் ஆதிமக்களான தமிழர்கள் தங்களின் கலாச்சார பழக்க வழக்கங்களை அடியோடு மறந்துவிட் டார்கள். அவற்றை ஒரு பிரிவினர் மறைத்து விட்டார்கள். இப்போது தமிழன் கொண்டாடும் அனைத்து கலாச்சாரங்களும் அவனை அடிமைச் சமூகமாக நிறுவவே உதவி செய்கின்றன. அறுவடை தவிர்த்த பிற பண்டிகைகள் நாம் அடிமைப்பட்டு கிடக்கும் காட்டுமிராண்டித் தன்மைக்கு வழி வகுக்கின்றன. எனவே, அடிமைத்தளையிலிருந்து வெளிவரவேண்டும் என்றால் சாதி இழிவை வளர்க்கும் கலாச்சாரங்களை பின்பற்றாதீர்கள். இதுதான் 1970ல் அவர் விட்ட அறிக்கையின் சாராம்சம். நம்மில் சிலர் பணம், பதவிக்கு ஆசைப் பட்டு, சாதி இழிவிற்கு துணை போகிறார்கள். இந்து சட்டம், நீதிமன்றம் என அனைத்திலும் பார்ப்பனர்களுக்கு ஒரு நீதி, சூத்திரர்களுக்கு ஒரு நீதி என்று இருக்கிறது. இதை லட்சியம் செய்யாமல் காட்டுமிராண்டி காலத்தவர்களாகவே இருக்கி றோம். இந்த புராண மாயையிலிருந்து வெளிவர வேண்டும் என 1943லேயே கட்டுரை எழுதியிருக் கிறார். அடிமைப்பட்டுக் கிடப்பது காட்டு மிராண் டித தனம் என அவர் பல சமயங்களில் சொன்னது தான், இப்போது வேறுவிதமாக திரிக்கப்பட்டு விட்டது.

### தமிழ்மொழி துவேஷியா பெரியார்?

தமிழ்மறை திருக்குறளையும் திருவள்ளுவரை யும் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்கிறார் பெரியார். ஆரிய எதிர்ப்பு என்ற புள்ளியில் அவர் திருவள்ளு வரோடு இணைகிறார். மற்றபடி சிலப்பதிகாரம், பகவத் கீதை போன்ற இலக்கியங்களை அவர் ஒரு பொருட்டாக கருதவில்லை. தமிழைக் காட்டு மிராண்டி மொழி என்று கூறியதற்கான காரணம் மொழி சீர்திருத்தம் மட்டுமே. தமிழை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் என அவர் தீவிரமாக நம்பினார். ஆனால் அதற்கு யாரும் செவி சாய்க்காததால் இப்படி பழமையை கட்டி அழும் மொழி காட்டுமிராண்டி மொழி என்றார். மதப்பற்று, சாதிப்பற்று போல மொழிப்பற்றும் முரட்டுத்தனமாக இருக்கக்கூடாது. நெகிழ்வுத் தன்மை இருக்க வேண்டும் என அவர் விரும்பினார். அதே சமயம் இந்தி திணிப்பையும், சமஸ்கிருத புனிதப்படுத்தலையும் தொடர்ந்து எதிர்த்தே வந்திருக்கிறார். அப்படிப்பட்டவர் ஆங்கிலத்தை மட்டும் கற்றுக்கொள்ளச் சொன்னது ஏன்? அவர் தமிழை விஞ்ஞானத்துறையில் புகுத்தி புதிய உலகை படைக்கவே விரும்பினார். ஆனால் நடைமுறை சிக்கலால் ஆங்கிலத்தை ஆதரித்தார். ஆங்கிலம்



கற்றுக் கொள்வதன் மூலம் பொருளாதாரம் ரீதியாக, அறிவு ரீதியாக அடுத்த கட்டத்திற்குச் செல்ல முடியும் என அவர் நம்பினார். அவர் அன்று சொன்னதுதான் இப்போது நடக்கிறது. ஆங்கிலம் வேலை வாய்ப்பில் முக்கியம் இடம் வகிப்பதை மறுப்பதற்கில்லை.

### பார்ப்பனர்களுக்கு எதிராக நஞ்சைப் பரப்பினாரா பெரியார்?

பார்ப்பனியத்தை மட்டும் பெரியார் எதிர்த்தாரே தவிர பார்பனர்களை அல்ல. பாம்பைக் கண்டால் விடு பார்ப்பனர்களை விடாதே என பெரியார் சொல்லியதாக எங்குமே ஆதாரம் இல்லை, முறை யான பதிவுகளும் இல்லை. பிராமணர் களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்று மில்லை. அவர்களின் சில பழக்கவழக்கங்களைத் தான் நாம் எதிர்க்கிறோம். அவர்கள் மனது வைத்தால் எளிதில் மாற்றிக்கொள்ள முடியும். நாம் ஒருவருக்கொருவர் சமமாகவும், சகோதர உரிமை யுடனும் இருக்க வேண்டும். அதில் பலாத் காரத்திற்கு இடமில்லை. 1953ல் ராயப் பேட்டை கூட்டத்தில் சொன்னார் பெரியார். எனக்கு எந்த சமூதாயம் மீதும் குரோதம் இல்லை. சமுதாயத்தில் பார்ப்ப னர்கள் அனுப விக்கிற உயர்வு மீதுதான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. இங்கே யாவரும் ஒருதாய் பிள்ளைகள் என அவர்கள் கருதுவார்களே ஆனால், நான் போராடத் தேவையே இருக்காது என பார்ப்பனத் தோழர்களுக்கு, 1962 அறிக்கையில் கூறுகிறார் பெரியார். பார்ப்பான் மேல் சாதியாய் இருக்கக் கூடாது என்பதுதான் என் எண்ணமே தவிர, அவன் பணக்காரனாக இருக்கக்கூடாது, நல்வாழ்வு வாழக்கூடாது என்பது என் எண்ண மில்லை, என

இறப்பதற்கு ஓராண்டு கூட1972ல் எழுதி னார் பெரியார். ஆனாலும், அவரை ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு எதிராக நிலை நிறுத்துவது தான் முரண்.



**வளர்ப்பு மகளையே திருமணம் செய்த காமவெறியரா பெரியார்?**

அண்ணா தேர்தல் அரசியலில் ஈடுபடப் போவதால் அவரை அடுத்த வாரிசாக அறிவிக்க முடியாத சூழ்நிலை பெரியாருக்கு. என்.அர்ஜுனன், ஈ.வே.கி.சம்பத் ஆகியோரை வாரிசாக அறிவிக்கும் முயற்சிகளும் தோல்வியில் முடிகின்றன. இயக்கத்தின் வாரிசாக அறிவிக்க சரியான ஆள் மணியம்மை தான் என முடிவு செய்கிறார் பெரியார். ஆனால் அன்று இருந்த இந்து சட்டத்தின்படி ஒரு பெண்ணை தத்தெடுக்க முடியாது. வாரிசாக அறிவிக்க வேண்டுமென்றால் திருமணம் மட்டுமே செய்ய முடியும். எனவே அவர் காலங்காலமாக எதிர்த்து வந்த அதே இந்து சட்டத்தின்படியே திருமணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். திருமணம் நடந்தபோது பெரியாரின் வயது 69 பிரம்மதேவனின் மாண்புமிகு புதல்வனான மன்மதனே அம்பு விட்டாலும் 69 வயது கிழவருக்கு உடலாசை தோன்ற வாய்ப்பில்லை என்பது பகுத்தறியும் அனைவருமே அறிவார்கள். எனவே இந்தக் குற்றச் சாட்டில் கொஞ்சமும் உண்மையில்லை.

**விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவரா பெரியார்?**

நிச்சயமாக இல்லை. கருத்து சுதந்தரத்தை பெருமளவில் மதித்தவர் பெரியார். ம.பொ.சி.யின் நண்பரான மாலி, பெரியாரை கடுமையாக விமர்சித்து நாடகம் இயற்றியபோது, உன் கருத்தை நீ சொல்லுற, அதுல தப்பொன்றுமில்லை என்றார் பெரியார். அவ்வளவு ஏன் பெரியாரை நேருக்கு நேர் எதிர்த்த ம.பொ.சி.யை பொது வாழ்வில் அவர் கடைப்பிடித்து வரும் நேர்மை, கொள்கையிலிருக் கும் உறுதி ஆகியவற்றால் மாற்றுக்கட்சியினராலும் போற்றிப் புகழத்தக்கவர் என 1962ல் வந்த பெரியார் பிறந்த நாள் மலரில் எழுதியுள்ளார். நான் சொல்வதில் பிழை இருந்தால் என் அறியாமையை மன்னியுங்கள் என சொல்லியிருக்கிறார் பெரியார். இங்கே விமர்சனங்கள் கூடாது என்பதில்லை. அவரை முழுமையாக படித்துவிட்டு ஏன், எதற்கு, எந்த காலக் கட்டத்தில் அப்படி சொன்னார் என்பதை தெரிந்து கொண்டு விவாவதிப்பது மட்டுமே சரியான விமர்சனமாக இருக்க முடியும்.

**பெரியார் மறைந்து விட்டாரா?**

பெரியார் என்பது அவரின் பெயரல்ல. அது ஒரு சித்தாந்தம். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாக சொல்லப்படும் மனுவின் நீதியை இன்னும் ஈர்ப்போடு இருக்கும்போது நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஒரு சித்தாந்தம் அழிந்து விடுமா என்ன? அவரின் சிலையை அகற்றினால் சித்தாந்தம் அழிந்துவிடும் என்பதில்லை. பின் ஏன் இந்த எதிர்ப்பு. சிலையைக் கூட இங்கே தொடமுடியாது என்ற உணர்வின் குறியீடு தான் அது. முன்பை விட இப்போது அதிகமாக பெரியாரிசம் பற்றி பேசவேண்டிய கட்டாயம் எல்லோருக்கும் இருக்கிறது. பேசுவோம். கருப்புச் சட்டை அதிகாரவர்க்கத்தின் கண்களில் மிரட்சியை கொண்டுவரும்வரையில் பெரியாரை புறக் கணித்துவிட்டு இங்கு அரசியல் செய்ய முடியாது என்ற நிலை இருக்கும் வரையில், பேர் என்ன எனக் கேட்டால் பெருமை விடுத்து பெயரை மட்டுமே சொல்லும் வரையில் அடையாளங்களை அறிவிக்க கூச்சப்படும் நிலை இருக்கும் வரையில் சாதி மத ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்வரையில் பெரியார் இருப்பார்.

**கடவுள் சிலைகளை நொறுக்கினாரா பெரியார்?**

எந்த கோவிலுக்குள்ளும் நுழைந்து சிலைகளை அடித்து நொறுக்கவில்லை பெரியார்.1953ல் தன் காசில் பிள்ளையார் சிலையை வாங்கி அதை உடைத்தார். காரணம் அதே பார்ப்பன சூத்திரக் கொள்கைதான். நீங்கள் கடலில் கரைக்கிறீர்கள் நான் அதையே உடைத்து மண்ணோடு மண்ணாக ஆக்குகிறேன், என விளக்கமும் அளித்தார். இது தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டது. பிள்ளையார் உருவத்தை அவர்களே செய்து அவர்களே உடைக்கிறார்கள். இதில் தவறொன்றுமில்லையே என வழக்கை தள்ளுபடி செய்தார் நீதிபதி ராமன் நாயர்.

●

# மருத்துவம்



தீராத முற்றிய நிலையிலுள்ள புற்றுநோய் நோயாளிகளுக்கு, ஒருமரபு வழியில்லாத சிகிச்சை முறை அளித்ததில், பெரும்பாலானோர், நோயிலிருந்து மீண்டிருக்கின்றனர்.

முதலில் அவர், நோயாளிகளின் நோயைக் குணப்படுத்த சூரிய ஆற்றலைப் பயன்படுத்தினார்.

உடலின் இயற்கையான நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பயன்படுத்தி செய்யும் இயற்கை வழிச் சிகிச்சை முறையில் நம்பிக்கையுடைய ஒருவரது கட்டுரையைப் பார்ப்போம்.

“புற்றுநோயைக்குணப்படுத்தும் உத்திகளில் இதுவும் ஒன்று!!! புற்றுநோயைக் குணப்படுத்தும் எனது சிகிச்சை முறைகளில் சமீபகால வெற்றி விகிதம் 80%.

புற்று நோயாளிகள் மரணத்தைத் தழுவக் கூடாது. புற்று நோயாளிக்கான சிகிச்சை ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளது.

அது நாம் பழங்களை உணவாக எடுத்துக் கொள்ளும் முறையில் உள்ளது. நீங்கள் நம்புவீர்களோ இல்லியோ இதுவரை வழக்கமான சிகிச்சை முறையில் இறந்த நூற்றுக்கும் அதிகமான புற்று நோயாளிகளுக்காக நான் வருத்தப்படுகிறேன்.

எல்லோரும் நினைப்பது பழங்கள் சாப்பிடுவது என்றால் அவற்றை விலைக்குவாங்கி, வெட்டி, வாயிலிட்டு சாப்பிடுதல் என்று. நீங்கள் நினைப்பது போல் எளிதானதல்ல அது, பழங்களை எப்படி அதுவும் எப்போது சாப்பிட வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

பழங்களைச் சாப்பிடுவதென்றால், உணவு உண்ட பிறகு பழங்களை உண்பது அல்ல! பழங்களை வெறும் வயிற்றிலேயே சாப்பிட வேண்டும்!!! பழங்களை வெறும் வயிற்றில் எடுத்துக் கொண்டால், அது நம் உடலின் நச்சுக்களை வெளியேற்றுவதிலும், எடைக்குறைப்பு, வாழ்வின் செயல்களுக்குத் தேவையான அதிகப்படியான ஆற்றலைத் தருவதிலும் பெரும் பங்கு வகிக்கிறது!!!



சாதாரணமாக நீங்கள் இரண்டு துண்டுகள் பிரட், அதன் பின் ஒரு துண்டு பழம் என்று எடுத்துக்கொள்கிறீர்கள் எனக்கொள்வோம். பழத் துண்டு வயிற்றின் வழியே நேராகக் குடலுக்குள் செல்லத் தயாராக இருக்கிறது. ஆனால் பழத்திற்கு முன்னால் எடுத்துக்கொண்ட பிரட்டினால் பழம் குடல் பகுதிக்குச் செல்வது தடுக்கப்படுகிறது.

இந்த சராசரி நேரத்தில் முழு உணவான பிரட் மற்றும் பழம் இரண்டும் அழுகி, புளித்து, அமில மாக மாறுகிறது. பழம் வயிற்றிலுள்ள உணவு மற்றும் செரிமானத்துக்கு உதவும் சாறுகளுடனும் சேரும் நிமிடத்தில். அந்த முழு நிறையான உணவு கெட்டுப்போக ஆரம்பிக்கிறது. அதனால் தயவு செய்து பழங்களை வெறும் வயிற்றில் அல்லது உணவுக்கு முன் சாப்பிடுங்கள்!!!

“ஒவ்வொரு முறை நான் தர்ப்பூசணி பழம் எடுக்கும் போதெல்லாம் எனக்கு ஏப்பம் வருகிறது. எப்போது நான் துரியன் பழம் சாப்பிட்டாலும் வயிறு ஊதிக்கொள்கிறது. எப்போது நான் வாழைப் பழம் சாப்பிட்டாலும், அவசரமாகக் கழிவறைக்கு ஓடவேண்டியிருக்கிறது. இதுபோல் இன்னும் பல புகார்களை பலர் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள்.

உண்மையில் நீங்கள் வெறும் வயிற்றில் பழம் எடுத்துக்கொண்டால் இந்த மாதிரி நிலைமை தோன்றாது! உணவுக்குப் பின் பழம் எடுக்கும் போது பழமானது மற்ற உணவுடன் சேர்ந்து அழுகுவதால் வாயு உற்பத்தியாகி வயிறு ஊதக்காரணமாகிறது!

நரைமுடி தோன்றுவது, தலையில் வழுக்கை விழுவது, நரம்புகளின் திடீர்எழுச்சி, கண்களின் கீழ்வளையம் தோன்றுவது இவையெல்லாமே, வெறும் வயிற்றில் பழங்கள் எடுத்துக்கொண்டால் நடக்காமல் தடுக்கப்படும்.

ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களெல்லாம் அமிலத்தன்மையுடையவை என்பதெல்லாம் உண்மையில்லை! ஏனென்றால் ஆய்வு முடிவுகளின் படி எல்லாப்பழங்களும், நமது உடலுக்குள் சென்றதும் காரத்தன்மையுடையவை யாகின்றன. சரியான முறையில் பழங்கள் சாப்பிடும் வகையை முழுவதுமாக அறிந்து கொண்டால், நமக்கு அழகு, நீண்ட ஆயுள், உடல் ஆரோக்கியம், உடலுக்குத் தேவையான ஆற்றல், மகிழ்ச்சி, சரியான எடை இவற்றைப் பெறும் இரகசியம் கிடைத்துவிடும்.

நீங்கள் பழச்சாறு அருந்தும் தேவை ஏற்படும் போது, புதிதான பழச்சாறுகளையே அருந்துங்கள் டின், பாக்கட் மற்றும் பாட்டில் இவற்றில் அடைக் கப்பட்ட ரெடிமேட் பழச்சாறுகள் வேண்டாம்.

சூடாக்கப்பட்ட பழச்சாறுகளையும் குடிக்க வேண்டாம். பதப்படுத்தப்பட்ட, சமைத்த பழங் களையும் உண்ணாதீர்கள் ஏனெனில் அவற்றிலி ருந்து உங்களுக்கு எந்தவிதமான சத்துக்களும் கிடைக்காது. சமைத்த பழங்களில் அதிலுள்ள விட்டமின்கள் அனைத்தும் அழிக்கப்படுகின்றன. உங்களுக்கு அதன் சுவை மட்டுமே கிடைக்கிறது. ஆனால் பழச்சாறு அருந்துவதை விட பழங்களை முழுதாகச் சாப்பிடுவது மிகவும் சிறந்தது.

நீங்கள் பழச்சாறு குடிப்பதாயிருந்தால், மடமட வென்று குடிக்காமல் மெதுவாக ஒவ்வொரு வாயாக

அருந்தவும் ஏனென்றால், நீங்கள் பழச்சாறு விழுங்குவதற்குமுன், அதனை வாயிலுள்ள உமிழ் நீரோடு நன்கு கலக்கச் செய்து பின் உள்ளே அனுப்ப வும். உங்கள் உடல் உறுப்புக்களைச் சுத்தம் செய்ய வும். உடலிலிருந்து நச்சுக்களை வெளியேற்ற வும், ஒரு 3 நாட்கள் பழங்கள் மட்டுமே எடுத்துக் கொண்டு விரதம் இருக்கலாம்.

அந்த 3 நாட்களும் பழங்களை மட்டும் சாப் பிட்டு, மற்றும் புதிதாய் எடுக்கப்பட்ட பழச் சாறுகளையும் மட்டுமே நாள் முழுவதும் எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்த டயட்டின் முடிவு நீங்களே ஆச்சரியப்படும் படி. நீங்கள் மிகவும் அழகாய் வனப்புடன் தோற்ற மளிப்பதாய் உங்கள் ஃபிரண்ட்ஸ் கூறும்போது உணர்வீர்கள்.

கிவி பழம், இது ஒரு சிறிய ஆனால் வலிமை மிகுந்த பழம் இப்பழம். பொட்டாசியம், மக்னீஷி யம், விட்டமின் ஈ மற்றும் நார்ச்சத்துக்கள் நிறைந்த ஓர் நல்ல பழம். ஆரஞ்சுப்பழத்தை விட விட்டமின் சி சத்து கிவி பழத்தில் இரண்டும் மடங்கு அதிகம் உள்ளது.

ஆப்பிள், ஒரு நாளைக்கு ஒரு ஆப்பிள் என எடுத்துக்கொண்டால் நோயின்றி வாழலாம் என்று சொல்வது உண்மையே!

ஆப்பிளில் விட்டமின், "சி" சத்து குறைவாக இருப்பினும் அதில் உள்ள antioxidants, flavonoids

போன்றவை இந்த விட்டமின் சி சத்துக்களை மேம்படுத்துவதால் பெருங்குடல் புற்றுநோய், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்துக்களைக் குறைக்கிறது!

ஸ்ட்ராபெர்ரி, பாதுகாப்புத்தரும் பழம். இந்தப் பழத்தில் மற்ற எல்லாப் பழங்களையும்விட மொத்த Antioxidant ஆற்றல் இருப்பதால், இது நம் உடலில் சுதந்திரமாய் கட்டுப்பாடற்று பல்கிப்பெருகும் அடிப்படைக்கூறுகளால் ( free radicals) இரத்த நாளங் களில் அடைப்பு, புற்றுநோய்க் காரணிகள் பெருகு தல் முதலியவை ஏற்படாமல் நம்மைப் பாது காக்கிறது.

ஆரஞ்சு, இனிப்பானமருந்து ஒரு நாளைக்கு 24 ஆரஞ்சு எடுப்பது ஜலதோஷத்தை விலக்கும். கொழுப்பைக் குறைக்க உதவும் மேலும் சிறுநீரகக் கற்களைக் கரைப்பதோடு கற்கள் வராமலும் தடுக்கும். அதனுடன் பெருங்குடல் புற்றுநோயின் ஆபத்தினைக் குறைக்கிறது.

தர்பூசணி, மிகவும் குளிர்ச்சியான ஒரு தாகம் தீர்ப்பான். 92% தண்ணீர்ச்சத்துக்களையுடையது. மேலும் இந்தப் பழத்தில் மாபெரும் அளவில் Glutathione இருப்பதால், அது நம் உடம்பின் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

மேலும் இது lycopene என்னும் புற்றுநோயை எதிர்த்துப் போராடும் ஒரு oxidant இன் முக்கிய ஆதாரமாகவும் உள்ளது. தர்ப்பூசணியில் உள்ள மற்றச்சத்துக்கள் விட்டமின் சி பொட்டா சியம் ஆகியவையும் உள்ளன.

கொய்யா, பப்பாளி இவை இரண்டுமே விட்ட மின் சி நிறைந்தது. உயர் விட்டமின் சி கொண்ட பழங்களைத் தேர்வு செய்தால் சந்தேகத் துக்கிட மின்றி வெற்றி பெறும் தகுதியுடையவை.

கொய்யாப்பழம் நார்ச்சத்து அபரிமிதமாக உள்ளதால் மலச்சிக்கலைத்தடுக்க உதவுகிறது.

பப்பாளிப்பழம் Carotene சத்துக்கள் நிறைந்தது எனவே கண்களுக்கு மிகவும் நல்லது.

உணவிற்குப் பிறகு குளிர்ந்த தண்ணீர் அல்லது பானங்கள் குடிப்பது புற்றுநோயை உண்டாக்கும்.

**உமா மகேசுவரி**



இந்து மதங்களை அடித்து நொறுக்கிய பானை ஒட்டு சங்ககால தமிழ்ப் பெயர்கள்.

தமிழ், தமிழர்களை மதங்களின் பெயரால் வஞ்சக மாக வீழ்த்த நினைத்தவர்களுக்கு கிடைத்த பேரிடி அறிவாயுதம் இதழிற்கு கடந் தாண்டு நான் எழுதிய கீழடி பற்றிய கட்டுரை

**கீழடி(சங்ககால தமிழர்களின் நகர நாகரிகம்) முத்தமிழ்வேந்தன்**

தமிழர்களின் பெருமையே பழமையான தமிழ்மொழியும், நாகரிகமான வாழ்க்கை முறையும் தான், வெண்பாமாலை நூலில் வரும் கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி“ என்று நாம் பெருமை பேசினாலும் அந்த பெருமைக்கான சான்றுகள் எல்லாமே சங்க நூல்களில் மட்டுமே உள்ளது.

தமிழர்களின் நாகரிகம் எப்படி இருந்தது என்பதற்கான சான்றுகள் பாகிசுதான் நாட்டில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள இரவி நதிக்கரையிலுள்ள அரப்பாவிலும், அங்கிருந்து 400 கி.மீ தொலைவில் சிந்து நதிக்கரையிலுள்ள மொகஞ்சதாரோ என்ற இடத்திலும், முப்பதாயிரம் மக்கள் வாழ்ந்ததற்கான அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கொண்ட ஊர்கள் அப்படியே மண்ணுக்குள் புதைந்த நிலையில் கடந்த நூற்றாண்டில் நமக்கு கிடைத்துள்ளன. அதற்கு வலுசேர்க்கும் விதமாக திரு.ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப.அவர்களின் சிந்துவெளியில் அமைந்துள்ள ஊர்கள், மலை களின் பெயர்கள், சங்க தமிழ் இலக்கியங் களிலுள்ள பெயர்களை இன்றளவும் தாங்கி நிற்கிறது என்ற அவரின் ஆய்வும் வலு சேர்க்கிறது.

**முதல் தீப்பெறி**

1974ம் ஆண்டு உழவிற்காக தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து கிடைத்த செங்கற்களை மாணவன் ஒருவன் கீழடி பள்ளியின் ஆசிரியரான திரு. பால சுப்பிரமணி அவர்களிடம் காண்பிக்கின்றான். அந்த செங்கல்லை பார்த்த ஆசிரியர் அவை சங்ககாலத்தை சேர்ந்தது என அறிகிறார். இதுதான் கீழடி வரலாற்றின் முதல்பொறி.

இயல்பிலேயே வரலாறு சார்ந்த விடயங்களில் ஆர்வமுள்ளவரான அவர் சில மாணவர்களை அழைத்துக்கொண்டு செங்கல் கிடைத்த அந்த கிணற்றை பார்வையிடுகிறார். கழுத்துக்கு மேலே தலை மட்டுமுள்ள மண்பொம்மை, கருப்புசிவப்பு வண்ணம் கொண்ட மண் குவளை, மண்டை ஓடுகள், எலும்புகள், நாணயங்கள், தாழிகள் என



கிடைக்கிறது. அவற்றை யெல்லாம் பாதுகாக்க பள்ளியில் இடமில்லாத காரணத்தால் அவருடைய வீட்டிலேயே வைத்துவிட்டு, அப்போது ஒருங்கி ணைந்த இராமநாதபுர மாவட்ட ஆட்சியருக்கு கீழடியில் கிடைத்த பொருட்களை பற்றி கடிதம் ஒன்றை அனுப்புகிறார். அதற்கு இன்றுவரை பதிலில்லை.



அடுத்த ஆண்டே பள்ளியிலேயே "இஸ்டா கார்னர்" என்ற பகுதியை ஏற்படுத்தி கிடைத்த பொருட்கள் அங்கு வைக்கப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு அப்போதைய தொல்லியல் ஆய்வுத்துறை யின் இயக்குநர் திரு. நாகசாமி அவர்களை சந்தித்து தகவலை தெரிவிக்க, அவர் ஆய்வாளர் வேதாசலம் அவர்கள் அனுப்பி அப்பொருட்களை கொண்டு வந்து சென்னை அருங்காட்சியகத்தில் வைக்க ஏற்பாடு செய்தார். மேலும் வெளிநாடுகளுக்கு ஆய்விற்கு அனுப்பி வைக்கிறார்.

**காலச்சக்கரம் சுழல்கிறது**

சரியாக 37 ஆண்டுகள் கடந்து 2013இல் தொல்லியல் ஆய்வாளர்கள் திரு வேதாசலம், திரு அமர்நாத், திரு ராஜேஷ் ஆகியோர் பண்டைய பொருட்கள் கிடைத்த அந்த கிணற்றை நிலத்தின் உரிமையாளர் திரு திலீப்கான் துணையோடு ஆய்வு செய்கிறார்கள். மேலும் வைகை நதிப் படுகையில் நடைபெற்ற கள ஆய்வில் சுமார் 293 பல்வகை தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள் அடையாளம் காணப்படுகின்றன. அவற்றில் கீழடி யைத் தேர்வு செய்து 2015, 2016 ஆம் ஆண்டுகளில் தொல்லியல் ஆய்வு செய்ய மத்திய அரசிடம் அனுமதி பெற்று ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. 2015ஆம் ஆண்டு 43 குழிகளும், 2016ஆம் ஆண்டு 59 குழிகளும் அமைத்து ஆய்வை மேற்கொண்ட னர்.

**நகர நாகரிகம்**

தமிழகத்தில் நடந்த அகழ்வாய்வுகளில் கட்டி டங்கள் கிடைப்பது அரிதான விடயம். ஆனால் அரிக்கன்மேடு, காவிரிபூம்பட்டினம், உறையூர், காஞ்சிபுரம் மற்றும் அழகன்குளம் போன்ற இடங்களில் கிடைத்ததைவிட கீழடியில் 10ற்கும் மேற்பட்ட சங்ககால கட்டிடங்கள் கிடைத்துள் ளன.

வரிசை வரிசையாக கால்வாய்கள், அதன் முகப்பிலேயே பெரிய தொட்டிகள், தொட்டிக்கு உள்செல்லவும் வெளிசெல்லவுமான அமைப்புகள், கால்வாய் தடத்தை ஒட்டி சிறிது பெரிதுமான ஆறு உலைகள், கால்வாயின் தொடக்கத்தில் வட்ட கிணறுகள், மூடிய வாய்க்கால்கள் திறந்த மற்றும் சுடுமண் குழாய்களால் ஆன வடிகால்கள் என மூன்று விதமான வடிகால் அமைப்புகள் முதன் முறையாக கிடைத்துள்ளன. சங்ககாலத்தில் கட்டி டங்களே இல்லை என்ற கூற்றை இந்த அகழாய்வு மாற்றி அமைத்திருக்கிறது.

மேலும் எழுத்தாணிகள், அம்புகள், முத்திரைக் கட்டைகள், உறை கிணறுகள், சுடுமண், முத்து மணிகள், தந்தத்தினால் ஆன தாயகட்டைகள், காதணிகள், சுடுமண் பொம்மைகள், செம்பு, இரும்பு, எலும்பினாலான ஆயுதங்கள், வணிகர்களின் எடை கற்கள், பண்டைய தமிழ் எழுத்து பொறித்த சங்க காலப் பெயர்கள் (சந்தன், உதிரன், ஆதன், மடைசி, எரவாதன்) ஆப்கானிஸ் தான் பகுதியை சேர்ந்த சூது பவளத்தினாலான மணிகள், ரோமாபுரியைச் சேர்ந்த மட்பாண்டங்கள் என ஒரு செழுமையான சங்ககால வாழ்வியல் எச்சங்கள் கிடைத்துள்ளன.

அதேபோல ஒரு தொழிலகம், நெசவுக்குரிய தக்கையில் துவங்கி எண்ணற்ற தொழில்நுட்ப கருவிகளும் கண்டறியப்பட்டுள்ளன. பலுசிஸ் தானில் கிடைக்கும் சால்டோனி, கார்னீலியன், அகேட் போன்ற அரிய வகை மணிகள், அணி கலன்கள் கிடைத்துள்ளன. பண்டமாற்று முறையில் இந்த அணிகலன்கள் இங்கு வந்துள்ளன.

தமிழர்களுக்கு நகர்ப்புற நாகரிகச் சான்றுகள் ஏதுமில்லை என்று பரப்புரை செய்யப்பட்டு வந்த நிலையில், கீழடி அகழாய்வு தமிழர்களின் நகர்ப்புற நாகரிகத்தை பறைசாற்றுகிறது.

இந்தியாவில் புகழ்பெற்ற வரலாற்றாளர்கள் பலரும் பழந்தமிழகத்தை ஒரு இனக்குழு சமூக மாகத்தான் வரையறுத்தார்கள். சிந்துவெளி நாகரிகத்தைப்போல, ஒரு நகர நாகரிகம் இங்கு

இல்லை என்பது அவர்கள் கருத்தின் அடிப்படை, இலக்கிய வர்ணனைகளை மட்டும் வரலாற்று ஆதாரமாக எடுத்து கொள்ளமுடியாது. எனவே இலக்கியங்கள் கடந்த ஆதாரங்கள் கண்டறியப் படாத நிலையில் அவர்களின் கருத்துக்கு உயிர் இருந்தது. ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள தரவுகள் அந்த கருத்தியலை தகர்த்திருக்கின்றன. சங்ககாலத்தில் தமிழகத்தில் நகர நாகரிகம் செழிப்புற்று இருந்ததை மெய்ப்பிக்கின்றன.

**ஆய்வுக்குத்தடை**

கீழடியில் இரண்டு ஆண்டுகளாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில், 2017ஆம் ஆண்டுக் கான அனுமதியை மத்திய அரசு நிறுத்தி வைத்தது. காரணம் அதுவரை நடைப்பெற்ற அகழாய்விற்கு அறிக்கை அளித்த பின்பே அனுமதி பரிசிலிக்கப் படுமாம்.

குசராத்திலுள்ள தொழவீராவில் 13 ஆண்டுகளும் லோத்தலில் 5 ஆண்டுகளும் ஆந்திராவிலுள்ள நாகார் ஜூனகொண்டாவில் 10 ஆண்டுகளும், அகிசித்ராவில் 6 ஆண்டுகளும் அகழாய்வு செய்தவர்கள், கீழடி ஆய்வை மட்டும் அறிக்கையை காரணம் காட்டி இரண்டே ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டு வருவதின் பின்னணி என்ன என்ற கேள்வி எழுகிறது (ஆதிச்சநல்லூரியில் 2005 ல் மேற்கொண்ட அகழாய்வு நிறுத்தப்பெற்று இன்றுவரை ஆய்வறிக்கையும், ஆய்வு முடிவும் வெளிவரவில்லை என்பது கவனிக்கத்தக்கது)

**கரிம பகுப்பாய்வு**

மொத்தமுள்ள 110 ஏக்கரில் 50 சென்ட் மட்டுமே (1% விழுக்காட்டிற்கும் குறைவாக) ஆய்வு செய்துள்ளனர். கரிம மூலப்பொருட்களின் மாதிரியை வேதிப்பொருள் ஆய்வகங்களுக்கு அனுப்பி கார்பன் 14 பகுப்பாய்வு எனும் முறையில் ஆய்வுசெய்து அப்பொருளின் காலத்தை கணக்கிடு கின்றனர். அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள பீட்டா அனலைசிஸ் ஆய்வு நிறுவனத்திற்கு இவை அனுப்பப்படுகின்றன. அகழாய்வில் கண்டறியப் பட்ட பொருட்களில் எத்தனை பொருட்களின் மூலக்கூறு மாதிரிகளை கார்பன் 14 பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டும் என்பதை மத்திய தொல்லியல்துறை முடிவு செய்கிறது.

இராஜஸ்தானில் நடத்தப்பட்ட அகழாய்வில் 28 பொருட்களும், தொழவீராவிலிருந்து 20 பொருட் களும், கிரிசராவிலிருந்து 15 பொருட்களின் மாதிரி களை ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள மூலப்பொருட் களின் மாதிரியில் 2 மட்டும்தான் கார்பன் 14 பகுப்பாய்விற்கு அனுப்ப மத்திய தொல்லியல்துறை அனுமதி வழங்கியுள்ளது. குறைந்தபட்சம் 10 பொருட்களின் மாதிரியாவது ஆய்விற்கு அனுப்ப வேண்டும் என்பது தொல்லியலாளர்களின் விருப்பம்.

இரும்புக்காலம் தொடங்கி வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியான ஆதாரங்கள் கிடைக்குமிடம் கீழடி. எனவே இந்த ஆதாரங்களை அறிவியல் பூர்வமாக நிறுவ இவ்வாய்ப்பு மிக முக்கியமானது. கீழடி அகழாய்வைத் தொடர அனுமதி மறுப்பதும், அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ள பொருட்களை தேவையான எண்ணிக்கையில் ஆய்வுக்கு அனுப்ப மறுப்பதும் பாரபட்சமானது.

"கீழடி அகழாய்வு பற்றி அறிக்கை கேட்டுள் ளோம். அறிக்கை வந்தவுடன் அகழாய்வை தொடர் வது பற்றி முடிவு செய்வோம்" என்கின்றனர் மத்திய கலாச்சாரத்துறை அமைச்சரும், தொல்லியல் துறையின் தலைமை இயக்குனரும் ஒத்த குரலில்.

**ஓரவஞ்சனை**

கீழடியோடு அகழாய்வு துவக்கப்பட்ட இடங்கள் வாட்நகர் மற்றும் பிஞ்ஜோர், வாட்நகர் பிரதமர் மோடியின் சொந்த ஊராகும், பிஞ்ஜோர் ராஜஸ்தானில் உள்ளது. அந்த இரண்டு இடங்களிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அகழாய்வு நடந்து முடிந்துள்ளது. 2017ஆம் ஆண்டுக்கான துவக்க நிகழ்ச்சி வாட்நகரில் கடந்த நவம்பர் 7ஆம் தேதியே கொண்டாடப்பட்டு விட்டது. பிஞ்சோரில் சனவரி 1ஆம் தேதி துவக்க விழா நடந்துள்ளது. இங்கெல்லாம் இவர்கள் அறிக்கையைப் பெற்றுத்தான் அடுத்த ஆண்டிற் கான அனுமதியை வழங்கினார்களா? என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

2005ஆம் ஆண்டு நடந்து முடிந்த ஆதிச்ச நல்லூர் அகழாய்வு முடிவு மற்றும் அறிக்கை தற்போதுவரை வெளிவரவில்லை. அகழாய்வு முடிந்து 12 ஆண்டுகளுக்கு பிறகும் அறிக்கையை வெளியிட முயற்சி செய்யாத தொல்லியல்துறை, அகழாய்வு நடந்துகொண்டிருக்கும் இடத்தின் அறிக்கையைக் கேட்டு அகழாய்வை நிறுத்துகிறது. இவை இரண்டிற்கும் இருப்பது ஒற்றை நோக்கம் தான்.

**என்ன செய்ய வேண்டும்**

கீழடியின் முக்கியத்துவம் அனைத்து வகையிலும் உணரப்படவேண்டும். அடையாளங்களை அழிப்ப தையும், மறைப்பதையும் வெளிப்படையாகச் செய்யும் அதிகார, ஆதிக்கவர்க்க அரசியலின் பார்வையில் இப்போது தமிழர் வரலாறு அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு கிடைத் துள்ள 5000க்கும் மேற்பட்ட பொருட்களில் மத அடையாளம் சார்ந்த பொருட்கள் என்று எதையும் சொல்லமுடியாது. பெரு மதங்கள் உருவாவதற்கு

முன்பே சிறந்து விளங்கிய தமிழர் நாகரிகத்தின் அடையாளம் கீழடி.

மொழியியல் அறிஞர் கால்டுவெல், தமிழ் மொழியின் சிறப்பை பற்றி கூறும்போது இது ஒரு சமயசார்பற்ற மொழி என்று மதிப்பீடு செய்தார். இந்த மதிப்பீட்டிற்கும், கீழடி நாகரிகத்திற்கும் இருக்கின்ற ஒற்றுமையை புரிந்துகொள்ள முடி கிறது.

தேசிய இனங்களின் தனித்துவமான பண்பாட்டின் மீதும், வரலாற்றின் மீதும் ஒரு பெருந்தாக்குதல் அரங்கேறிக்கொண்டிருக்கும் இந்த காலத்தில், கீழடியில் கிடைத்துள்ள நாகரிகத்தின் எச்சங்களை பாதுகாப்பதும், அங்கு அகழாய்வைத் தொடரச் செய்வதும், கிடைத்த பொருட்களை தென்னிந்திய தொல்லியல் தலைமையிடமான மைசூருக்கு கொண்டு செல்லாமல், கிடைத்த இடத்திலேயே கள அருங்காட்சியகம் அமைத்து பாதுகாப்பதும், தமிழ்சமூகத்தின் அர்த்தமிக்க வாழ்வியல் வரலாற்றுச் சாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கை யாகும்.


இல்லாத சரசுவதி நதியைக் கண்டறிய கோடிக் கணக்கில் செலவிட்டுக் கொண்டிருக்கிற மத்திய அரசு, அறிவியல் பூர்வமான ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்ட கீழடியில் ஆய்வைத் தொடர அனுமதி மறுக்கிறது. இராமாயண அருங்காட்சிய கத்தை அயோத்தியில் அமைக்க ரூபாய் 151 கோடியும், கன்னியாகுமரியில் அமைக்க ரூபாய் 15 கோடியும் ஒதுக்கி கட்டி முடிக்கப் பெற்று திறப்பு விழாவும் கண்ட இந்த அரசுதான் கீழடியில் கண்டறியப்பட்ட பொருட்களை காலப் பகுப்பாய் விற்கு அனுப்ப வெறும் ஒரு இலட்சத்தை ஒதுக்கி யுள்ளது.

இந்த அப்பட்டமான வரலாற்றுத் துரோகத்திற்கு எதிராக, தமிழக அரசும், அரசியல் கட்சியினரும் அறிவுத் துறையினரும் ஊடகவியலாளர்களும் படைப் பாளிகளும் எழுத்தாளர்களும் வரலாற்றாய் வாளர்களும் தமிழறிஞர்களும் கலைத்துறை யினரும் மாணவர்களும் இளைஞர்களும் தமிழர் என்ற ஒற்றை அடையாளத்துடன் தொன்மையான தமிழர் வரலாற்றை மீட்டெடுக்க ஒன்றுபட்டு போராட முன்வரவேண்டும்.

**நன்றி: திரு. முத்தமிழ்வேந்தன்.**

“தமிழகத்தில் கிடைத்துள்ள மிக முக்கியமான கண்டுபிடிப்புகள் இவை. இக்கண்டுபிடிப்புகளின் மூலம் தமிழக வரலாற்றை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்“.

**ரொமிலா தாப்பர்.**




எய்ம்ஸ் என்றால் அது ஏதோ மருத்துவ உலகில் பெரிய டெக்னாலஜி என்ற ஒரு பிம்பத்தை உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். அது தமிழ்நாட்டுக்கு வருவது மிகப் பெரிய நன்மை என்றும் அது ஒரு வரப்பிரசாதம் என்றெல்லாம் புல்லரிக் கிறார்கள்.

**எய்ம்ஸ் என்றால் என்ன?**

All India Institute of Medical Science –ன் சுருக்கிய வடிவம் தான் AIIMS. தமிழில் எய்ம்ஸ். இன்ஜீனியரிங் கல்லூரிகளில் ஒரு ஐஐடி போல மருத்துவத்துறைக்கு ஒரு எய்ம்ஸ். எய்ம்ஸ் மருத்துவமனை மத்திய அரசால் நடத்தப்படுவதால் அதற்கு நிதி ஆதாரம் அதிகமாக இருக்கும். எனவே பல்வேறு உயர் சிகிச்சைக்கான வசதிகள் அங்கே இருக்கும். அது மக்களுக்கு கிடைக்கும். இவ்வளவு தான் எய்ம்ஸ்.

இதற்கு ஏன் இவ்வளவு பில்டப்? வட இந்தியாவில் அடிப்படை கட்டமைப்புகளே அவ்வளவாக இருக்காது. அங்கே மருத்துவமனைகளும் குறைவு. அதனால் எய்ம்ஸ் என்றால் அங்கே வாயைப் பிளப்பார்கள். தமிழ்நாடு அப்படியல்ல. இந்தியாவின் மருத்துவத் தலைநகரம். இங்கே எல்லா மருத்துவ வசதிகளும் உள்ளன. சாதாரண பிரைமரி ஹெல்த் சென்டரில் கூட மிக மிகச் சிக்கலான சவாலான அறுவை சிகிச்சைகளை அசாதாரணமாக வெற்றியுடன் செய்துவிடு வார்கள் நம் மருத்துவர்கள்.

தமிழ்நாட்டில் வேலூர் சிஎம்சி போன்று, அரவிந்த் கண் மருத்துவமனை போன்று, மருத்துவ சேவைகளை எந்த எய்ம்ஸாலும் முடியாது. இந்தியாவில் மருத்துவத்துறையில் சிறந்தவர்கள் தமிழர்களே. எய்ம்ஸ் தமிழ்நாட்டில் அமைந் தால், அதனால் எய்ம்ஸ் என்ற அந்த பிராண்டுக்கு தான் பெருமையே தவிர, எய்ம்ஸால் தமிழ்நாட்டுக்கு அல்ல… AIIMS, Just another hospital… That’s all

**உமாமகேசுவரி**

# புதிய வடிவில் மனு தர்மம்

சைதை மணிமாறன்.

பிராமணர் அல்லாது தாழ்த்தப்பட் சமூகத்தை சேர்ந்த ஒருவன் கல்வியை தன் காதினால் (வேதம் ஓதுவதை) கேட்டால், அவனது காதில் ஈயத்தை காய்த்து ஊற்ற வேண்டும் என்று மனு தர்மம் போதிக் கின்றது. அதாவது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவன் கல்வி அறிவு பெற்று சிந்தித்து விட்டால் அந்த சமூகம் உயர்ந்து விடும். ஆகவே அச்சமூகத்தை தாழ்ந்த நிலையிலேயும், ஏழ்மை நிலையிலையும் வைத்திருக்க வேண்டும். அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்பது இதன் கருத்து.

இன்று மனு தர்மம் புதிய வடிவில் நிறைவேற்றப்படு கின்றது. அது எப்படி எனில் இளைஞர்களுக்கு கஞ்சா, பிரவுன் சுகர் என்ற போதைப் பொருள் மிக சர்வ சாதாரணமாக விற்கப்படுகிறது. இதை வாங்கி உபயோகிக்கும் போது அவர்கள் மயக்கம் உற்று கல்வி கற்கும் சூழலில் இருந்து வெளியேறுகின்றனர். இதனால் காமராஜர் ஆரம்பித்த மதிய உணவு திட்டமும், கலைஞரின் இலவச பஸ்பாஸ், தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஊக்கத் தொகை கொடுத்து, கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையும், கல்வி கற்பவர்களின் திறமையையும் உயர்த்தும் திட்டமும் பயனற்றுப் போனது.

காமராஜர், கலைஞர் ஆட்சியின் பயனால் தாழ்த்தப்பட்டவர்கள் பொருளாதாரத்தில் உயர்ந்த தைக் கண்டு பொறாமை கொண்ட மனுதர்ம வாதிகள், இந்த புதிய மனுதர்ம கொள்கையை நிலைநிறுத்தி காமராஜர், கலைஞரின் ஆட்சியின் பயனால் நல்வழியில் செயல்படுகின்றவர்களின் செயல்கள் மாற வழிவகை செய்தனர். போதையால் பீடிக்கப்பட்ட இளைஞர்களே, கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் துன்புறுத்தல் போன்ற சமூகசீர்கேட்டு காரியங்களில் ஈடுபட்டு தங்களது வாழ்வை சீரழித்து கொள்கின்றனர். இந்த சமூகசீர் கேட்டை, ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் கண்டுகொள்வதில்லை. ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஆரியக்கூட்டம் இதைக்கண்டுக்கொள்ளாமல், அழிவது தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகமே என்பதால் ஊக்கப்படுத்து கின்றனர்.

நான் தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு ஆள் சரியான தமிழரல்ல. இதை நாங்கள் இன்று தான் தெரிந்து கொண்டோம். இதை தமிழ் இனக் காவலரான கலைஞர் அன்றே தெரிந்து கொண்டார் போலும். அதனால் இத்துரோகியை அவர் அன்றே சிறையில் அடைத்தார். அவரது பேச்சை வலைத்தளங்களில் கேட்டேன். அதில் ரவிச்சந்திரன் (ராஜீவ்காந்தி கொலையில் ஆயுள் தண்டனை பெற்றவர்) எழுதிய சிவராசனின் டாப் சீக்ரட் என்ற புத்தகத்தை அவர் அபிறழாமல் வாசித்து மனப்பாடம் செய்து விட்டு அதை அப்படியே மேடையில் ரவிச்சந்திரன் தன்னுடன் அமர்ந்து பேசியது போல் நயமாகவும், வஞ்சகமாகவும் பேசியுள்ளார். ஒரு சில இடங்களில் என் தம்பிமார்கள் இப்படி எல்லாம் கஷ்டப்பட்டார்கள் என கூறி தன்பேச்சுக்கு மெருகு ஏற்றுகின்றார்.

ராஜீவ் கொலை யில் விசாரணையில் உள்ள சந்தேக கேள்விகளை பெரிதாக எடுத்து கூறி தான் அதற்கான போராடுபவர் போல தன்னை சித்தரித்து காட்டுகின்றார். இதனால் மக்களுடைய சிந்தனையில் வேகத்தை கூட்டி தான் ஒரு தமிழ் படைப்பாளி, போராளி போல் தன்னை காட்டுகிறார். ஆனால் உண்மையான முக்கியமான விசயங்களை அந்த 7 பேரும் சிறையில் இருந்து வெளி வருவதற்கான முக்கிய செய்திகளை எடுத்துக் கூறாமல் விட்டு விடுவதே இவர் வேலை, எவ்வளவு நரித்தனம்.

ரவிச்சந்திரன் எழுதிய சிவராசனின் டாப் சீக்ரட் என்ற புத்தகத்தில் விசாரணை அதிகாரி தியாகராஜன் தன்னை (ரவிச்சந்திரனை) இலங்கைகாரர் (வெளிநாட்டுக்காரர்) என்றும், விடுதலைப் புலிகள் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்று கூறுகிறார். ரவிச்சந்திரனுடைய தகப்பனார் தமிழக அரசின் பள்ளியில் வேலை செய்யும் ஒரு ஆசிரியர். சமீபத்தில் ரவிச்சந்திரன் பரோலில் வெளிவந்து, தனது தகப்பனார் சொத்துக்களை பாகம் பிரித்து பெற்றுக்கொண்டார். இவ்வாறு இருக்கும் பட்சத்தில் எப்படி அவர் இலங்கைக்காரர் என்று அவர்மீது குற்றப் பத்திரிக்கையை தவறுதலாய் சுமத்தினார்கள்.

இதை உச்சநீதிமன்றம் எவ்வாறு கவனிக்காமல் விட்டது? உச்சநீதிமன்றம் தெளிவாக ஏமாற்றப் பட்டுள்ளது. தியாகராஜன் என்ற இந்த அதிகாரி பேரறிவாளன் பேட்டரியை என்ன உபயோகத்திற்கு என்று அறியாமலே வாங்கி கொடுத்தேன் என்று சொன்னதை, அறிந்தே வாங்கி கொடுத்தேன் என்று தவறுதலாய் பதிவு செய்து விட்டேன் என்று அபிடவிட் கொடுத்து உள்ளார். (இங்கு தான் சதி செயல் ஆரம்பம். இவர்கள் வெளிவராத படிக்கு நடைபெறுகின்றது).

தொடரும்...

# பெண்களின் மாதவிடாய் கோளாறுகளுக்கான ஆலோசனைகள்

மருத்துவர் **எம். ஹேமாவதி** எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஒ.
முதன்மை அலுவலர், அரசு மருத்துவமனை திருத்தணி.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : **சேர்மன். ஜலதி உமாசங்கர்**

***முன்னுரை:***

*பெண்களுக்கு மாதவிடாய் பற்றிய கேள்விகளும், சந்தேகங்களும் அதைக்குறித்த விழிப்புணர்வுகளும் அதிகரித்து வரும் இந்நாளில் அதைக் குறித்த சில விளக்கங்களும் தெளிவுரைகளும்.*

***மாதவிடாய் சுழற்சி:***

*மாதவிடாய் சுழற்சி என்பது 28 நாட்களுக்கு ஒருமுறை நடக்கும். ஆனால், எல்லாப் பெண்களின் உடலும் இந்த சுழற்சியில் அமைவதில்லை. சிலருக்கு 28 நாட்களுக்கு முன்பாகவும், சிலருக்குப் பின்பாகவும் ஏற்படும். 21 முதல் 35 நாட்களுக்குள் ஏற்பட்டுவிட வேண்டும். இந்நாட்களுக்கு முன்னோ பின்னோ வருவது ஏற்பட்டால் அவசியம் மருத்துவரை அணுக வேண்டும்.*

***மாதவிடாய்க் கோளாறுகள்:***

*1) 21 நாட்களுக்கு முன்னர் வருவது*

*2) 35 நாட்களுக்குப் பின்னர் வருவது*

*3) தொடர்ந்து வராமல் இருப்பது*

*4) அதிக உதிரப்போக்கு ஏற்படுவது*

*5) மிகக் குறைந்த அளவு இரத்தப் போக்கு இருப்பது*

*6) ஒழுங்கற்ற சுழற்சிகள் ஏற்படுவது*

***அ) ஒழுங்கற்ற மாதவிடாய்க்கான காரணங்கள்:***

*பூப்பெய்தது முதல் 19 வயது வரை ஒழுங்கற்ற மாதவிடாய் இருப்பது சாதாரண விசயம். ஒருசிலருக்கு 30 முதல் 35 நாட்களுக்கு ஒருமுறை சுழற்சி நடக்கும். இருபது வயதிற்கு மேல் மாதவிடாய் சீரான இடைவெளியில் ஏற்படும்.*

***ஆ) தைராய்டு பிரச்சினைகள்:***

*தைராய்டு சுரப்பி சரியான அளவில் சுரக்காமல் இருக்கும் பட்சத்தில் மாதவிடாய் சுழற்சி பாதிக்கப்படும். இதில் இரண்டு வகை உள்ளது.*

*ஹைபோதைராய்டு எனப்படும் பிரச்சினையில் தைராய்டு ஹார்மோன் சுரப்பி குறைவாக சுரப்பதினால் மாதவிடாய் நாட்கள் ஒழுங்கில்லா மலும், அளவு குறைந்தும் ஏற்படும். இதனால் உடல் பருமனாதல், உடல் சோர்வு, தூக்கமின்மை, கருஉருவாவதில் சிக்கல் போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.*

***இரத்த சோகை:***

*அனிமிக் எனப்படும் இரத்தசோகை இன்று பெரும்பாலான இளம்பெண்களிடம் காணப்படுகிறது. காரணம், ஒழுங்கற்ற சாப்பாடு முறைகள், சரிவிகித உணவு உட்கொள்ளாமல் இருப்பது, இரத்தத்தில் ஹிமோகுளோபின் அளவு ஒன்பதிற்கும் கீழே குறையும்போது மாதவிடாய் கோளாறுகள் ஏற்படுகின்றன.*

***ஹார்மோன் இம்பேலன்ஸ்:***

*ஹார்மோன்கள் சுரக்கும் சுரப்பில் ஏதோனும் பாதிப்பு ஏற்படும்போது மாதவிடாய் சுழற்சியில் பாதிப்பு உண்டாகிறது.*

***சரி செய்யும் வழிகள்:***

*பூப்பெய்தவுடன் வரும் கோளாறுகள் தானாக 21 வயதிற்கு மேல் சரியாகிவிடும்.*

*அதிக உதிரப்போக்கு இருந்தால் மருத்துவரை அணுகுதல் அவசியம்*

*மாதவிடாய்க் கோளாறு ஏற்படின் தைராய்டு அளவை பரிசோதனை செய்து குறைவாக உள்ளதா, அதிக அளவுல் உள்ளதா என்பதற்கேற்ப மருத்துவம் செய்து கொள்ள வேண்டும்.*

*உடல் எடையைக் குறைத்தல் வேண்டும். உணவு முறைகளையும் மாற்ற வேண்டும். ஜங்க் ஃபுட்* களைத் தவிர்த்து உடற்பயிற்சியை மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும். கருமுட்டையில் நீர்க்கட்டியின் தன்மைக்கு ஏற்றவாறு மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும்.*




இயற்கையாக ஒவ்வொரு மாதவிடாய் சுழற்சியின் போதும் இரத்தப்போக்கு ஏற்படும். இதை ஈடுசெய்யும் விதமாக இரும்புச்சத்து உள்ள பொருட்களை உட்கொள்ள வேண்டும். இரத்தசோகை உள்ள பெண்கள் அதன் அடிப்படைக் காரணம் அறிந்து சிகிச்சை பெற வேண்டும்.

அதிக மனஅழுத்தம் காரணமாகவும் மாதவிடாய் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மன அழுத்தத்தையும் கூடுமான வரையில் தவிர்த்தல் வேண்டும்.

மாதவிடாய் காலங்களில் செய்யக்கூடாதவை, செய்யக்கூடியவை.

1. மாதவிடாய் சுழற்சியின் போது லேசான அடிவயிற்று வலி ஏற்படும் வாய்ப்புள்ளது. அதற்கு மாத்திரை உட்கொள்ளத் தேவையில்லை.

2. நாப்கின்களை ஆறு மணி நேரத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும்.

3. அதிக அளவில் தண்ணீர், பழங்கள் உட்கொள்ள வேண்டும்.

4. தேநீர், அதிக இனிப்பு வகைகளை தவிர்த்துக் கொள்ளலாம்

5. தினசரி பேரீச்சம்பழம், இரும்புச்சத்துள்ள பொருட்களை எடுத்துக் கொள்வது சிறந்தது.

6. சுத்தமாக இருத்தல் வேண்டும்

7. துணிகளை பயன்படுத்துவரை விடுத்து சுத்தமான சானிட்டரி நாப்கின் பயன்படுத்த வேண்டும்.

திருவள்ளூர் மாவட்ட மனநல திட்டத்தின் சார்பாக சிவாடா அரசு உயர்நிலைப்பள்ளி, நெமிலி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு மாவட்ட மனநல மருத்துவக்குழு மருத்துவர் டாக்டர். சகுந்தலா தேவி, தண்டாயுதபாணி, மனநல உளவியலாளர். சுபாஷ் மனநல மற்றும் சமூக ஆர்வ லர், பிரதீபா மனநல செவிலியர், மனஅழுத்தம், மன பதற்றம், மனநலம் சார்ந்த அறிவுரைகளையும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத இருக்கும் மாணவர்களுக்குத் தேர்வு எதிர்கொள்ளுவதற்கான மன உறுதியையும், தேர்வில் வெற்றி, தோல்வியை சந்திப்பதற்கான மன பக்குவத்தையும் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வ தற்கான அறிவுறுத்தலை விளக்கினர்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம் சிவாடா கிராமத்திலுள்ள அரசு உயர் நிலைப்பள்ளி மாணவர்களை வைத்து வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வருவாய் ஆய்வாளர் திருமதி டில்லிராணி அவர்களும், கிராம நிர்வாக அலுவலர்கள் திரு. பரத், திரு. நிர்மல்குமார், திரு மூர்த்தி, பள்ளி தலைமையாசிரியர் திரு. எஸ்.கோபாலகிருஷ்ணாராவ். Msc,Med., M.Phil., ஜலதி அறக்கட்டளை சார்பில், சேர்மன் ஜலதி உமாசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாள்: 5/3/2019, பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, ஜலதி அறக்கட்டளை சேர்மன் மற்றும் எக்சிகியூட்டிவ் போர்டு ஆஃப் டைரக்டர் பி. ரேணுகா, பி. எச். எம். எஸ்.,


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**




Jaladhi foundation 4th event " Awareness program for health and nutrition" for women held at GRT institute of engineering and technology on 22-02-2019 at 3:00 to 4:00 PM comprised of Chief Guest Dr. Hemavathi MBBS, BGO,ChairmenJaladhi Uma sankar Triple M.A, Board of executive director Dr.P. RenukaB.H.M.S, Treasurer K. Kalaithendral M.E and college students.




Jaladhi foundation 5th event "Stress management, suicide prevention and mental health awareness" The program conducted for the students of Government Higher secondary school, Chivada accompanied with the Chief Guest Dr. C.S. Sakunthala Devi MBBS., DPM., - Psychiatrist, Chairman Jaladhi Uma sankar, Triple MA, Special Guest S. Gopalakrishna Rao M.Sc., M.Ed., M.Phil.,- Head master,Treasurer K. KalaiThendral M.E.




Jaladhi foundation 6th event "Voters awareness campaign on EVM & VVPAT" rally conducted for awareness of election and responsibility of every citizen as voter in thiruvallur district.


அம்மா மக்கள் முன்னேற்ற கழக
திருவண்ணாமலை மத்திய மாவட்ட நிர்வாகிகளான எங்களை
மாண்புமிகு மறைந்த முதல்வர்
இதயதெய்வம் புரட்சித்தலைவி
அம்மா
அவர்களின்
நல்லாசியுடன்
மாண்புமிகு தியாகத் தலைவி
சின்னம்மா
கழக பொதுச்செயலாளர்,
அவர்களின் வழிகாட்டுதலின்படி எங்களை நியமனம் செய்த
கழக துணைப் பொதுச்செயலாளர் வெற்றி செல்வர்
திரு. T.T.V.தினகரன் B.E.,MLA.,
ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்
திரு.P.வாசுதேவன் Ex.MLA.,
கழக அமைப்பு செயலாளர், மண்டல பொறுப்பாளர்
திரு.N.G.பார்த்திபன் Ex.MLA.,
மண்டல பொறுப்பாளர்
A.G.பஞ்சாட்சரம்
மாவட்ட கழக செயலாளர், திருவண்ணாமலை மத்திய மாவட்டம்
ஆகியோர்களுக்கும் எங்களது
நன்றி! நன்றி!! நன்றி!!!
-: இங்ஙனம் :-
C.விஜயகுமார்
மாவட்ட செயலாளர்,
அம்மா பேரவை
S.ராஜசேகரன் MCA.,
மாவட்ட செயலாளர்
MGR இளைஞர் அணி
P.K.பிரபு B.E.S., DME.,
மாவட்ட செயலாளர்
மாணவர் அணி
HRS.அப்பத்(எ)ஹுமாயூன் கபீர்
மாவட்ட செயலாளர்
அமைப்புசாரா ஓட்டுனர் அணி
திருவண்ணாமலை அம்மா மக்கள் முன்னேற்ற கழகம்